# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசாரியா- சென்னை, வீர்ஜின், வில்சன் மேரி, ஜெசிந்தா ஆரோக்கிய மேரி, ஜோஸ்பிட்டா மேரி- திருச்சி, மிரியம், ஜெயசேகரி- திண்டுக்கல், அனன்சியா மேரி, அருள் மேரி, டோம்னா மேரி, ஜார்லத் புஷ்பா, லூக்காஸ் மேரி, டோனெட்டல்லா அனஸ்த்தாசியாள், பவுலின், பிலோமினாள் - கும்பகோணம், ஆக்னஸ் ரோசாள், லோரா மேரி - தூத்துக்குடி, ரூபெல்லா மேரி, வித்யா மேரி, பிரேமா - திருநெல்வேலி, ஜான்சி மேரி, ஃபெர்சி மேரி- மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, செபஸ்டி - விழுப்புரம், சலேத்மேரி - திருப்பூர், ரூபி மேரி - கரூர், அருள் சீலி -முட்டம், செராஃபின் மேரி - தாராபுரம்

**பொதுநிலையினர்**

ரூபியா - மங்கலக்குன்று, பிரான்சிஸ் பேசில், ஆனி பீட்டர் ராஜ், கிளாரா லூர்து மேரி, அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா, மெரினா, பாத்திமா, ஞானசேகரன், நான்சி பியூலா, செலின் மேரி - திருச்சி; -ததேயுஸ் கரோலின் - திருப்பூர், புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர். ரீனா அந்தோணிராஜ், வியாகுல மேரி, ராணி - சென்னை, மரிய பிரகாசம் - தர்மபுரி, மேரி - இளையரசனேந்தல், சிப்ரியன் - தெளி.

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



அருட்சகோதரி. வில்சன் மேரி FIHM - திருச்சி
அருட்சகோதரி. லோரா மேரி- தூத்துக்குடி
அருட்சகோதரி. பிரேமா - திருநெல்வேலி
திருமதி. ததேயுஸ் கரோலின் - திருப்பூர்
திரு. சிப்ரியன் - தெளி
திருமதி. ராணி - சென்னை

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.








# காட்சிகளின் அன்னை

## பதிப்பாசிரியர் பக்கம்


ரு.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச

ஆகட்டும் இதழின் வாசகர்களே, அன்னை மரியாளின் பக்தர்களே, விண்ணகத்திற்கு உடலோடு எடுத்துச் செல்லப்பட்ட அன்னை மரியாள் தன்னுடைய உலகமாக விண்ணகத்தை மட்டும் நினைக்கவில்லை தான் வாழ்ந்த மண்ணகத்தையும் தன்னுடைய உலகமாக நினைத்தக் காரணத்தினால்தான் பல இடங்களில் பல தோற்றங்களில் அன்னை மரியாள் காட்சிக் கொடுத்தார். ஏன் இன்றும் காட்சிக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றார். அவர் எத்தனையோ இடங்களில் காட்சிக் கொடுத்திருந்தாலும் லூர்து நகரில் கொடுத்தக் காட்சி ஒரு சிறப்பானக் காட்சியாகக் கருதப்படுகிறது.

காரணம் கொடுத்தக் காட்சிகளின் எண்ணிக்கை மற்றும் காட்சியினைப் பார்த்த நபர். இந்த லூர்து நகரில் அன்னை ஒருமுறை இரண்டு முறை காட்சிக் கொடுக்கவில்லை மொத்தம் பதினெட்டு முறை காட்சிக் கொடுத்திருக்கின்றார். அதுவும் யாருக்கு காட்சிக் கொடுத்திருக்கின்றார்? ஒரு பெண்ணுக்கு அதுவும் பதினான்கு வயது சிறுமிக்கு காட்சிக் கொடுத்திருக்கின்றார்.



## உள்ளே



கதையினில் கலந்த மரியா - 05
ஊழியரின் அன்னையும் அரசியுமான மரியா - 06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
கறைபடா ஓவியம் - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மாதா மன்றாட்டு மாலை - 25
பொதுநிலையினரின் பார்வையில் மரியா - 28
அன்னையின் அரவணைப்பில் - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

**எண்ணிக்கை அதிகம் அதனால் எண்ணமும் அதிகம்**

அன்னை மரியாள் இந்த லூர்து நகரில் 1858-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 முதல் அதே வருடம் ஜூலை மாதம் 16 வரை மொத்தம் 18 முறை காட்சிக் கொடுத்திருக்கின்றார். அன்னை மரியாள் இந்த உலகத்திற்கு அழுத்தம் திருத்தமாக எதையோ சொல்ல முற்பட்டதின் விளைவுதான் இத்தனை முறை காட்சிக் கொடுத்ததின் நோக்கமாக இருக்க முடியும். அந்த நோக்கம் மனமாற்றம் பாவிகள் மனமாற வேண்டும், கடவுள் மறுப்பில் ஊறி இருக்கக்கூடிய நாடுகள் அனைத்தும் கடவுளை நம்ப வேண்டும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த நாட்டு மக்களுக்கு நல்ல மனமாற்றம் ஏற்பட வேண்டும் இதற்காக அனைவரும் ஜெபிக்க வேண்டும் இதுதான் அன்னை மரியாளின் எண்ணமாக இருந்தது. இந்த எண்ணத்தை ஒருமுறை வலியுறுத்தினால் மனதில் ஆழமாக பதியாது, தொடர்ந்து வலியுறுத்தினால்தான் மனதில் பதியும் அதனால்தான் அன்னை மரியாள் இத்தனைமுறை காட்சிக் கொடுத்திருக்கக் கூடும்.

விண்ணக மண்ணக அரசியான அன்னை மரியாளுக்கு தான் வாழ்ந்த மண்ணகத்தின் நிலவரத்தைப் பார்க்க ஆவல் இருக்காதா என்ன? நிச்சயமாக இருக்கும். தனக்கு ஒரு அடையாளத்தை வாங்கிக் கொடுத்தது இந்த மண்ணகம்தான். கடவுளின் ஒரே மகனைப் பெற்றெடுத்து கடவுளின் தாய் என்ற அடையாளத்தைப் பெற்றதாக இருக்கட்டும், எத்தனையோ பெண்கள் மெசியாவுக்கு தாய் ஆக மாட்டோமா என்று ஆசைப்படும் போது அந்த வாய்ப்பானது அன்னை மரியாளுக்கு கிடைத்தக் காரணத்தினால் அவர் பெண்களில் பேறுபெற்றவள் என்ற அடையாளத்தைப் பெறுகின்றார்.

**காட்சியினைக் கண்ட சிறுமி பெர்னதெத்**

அன்னை மரியாள் காட்சிக் கொடுத்தது ஒரு படித்த மேதைக்கு கிடையாது, ஒரு அறிவில் சிறந்தப் பெண்மணிக்கு கிடையாது, முற்றும் துறந்த துறவிக்கு கிடையாது, திருஅவையில் முக்கியப் பொறுப்புகளில் இருக்கக் கூடிய ஆயர்களுக்கோ, குருக்களுக்கோ கிடையாது. ஒரு சாதாரண படிப்பறிவில்லாத பாமர 14 வயது சிறுமிக்கு. அந்த சிறுமியிடம் புரிந்து கொள்கின்ற திறன் குறைவாக இருந்திருக்கலாம் அதனால்தான் அன்னை மரியாள் சிறுமி பெர்னதெத்துக்கு தன்னுடைய காட்சியின் நோக்கத்தினைப் புரிய வைக்க பல முறை காட்சிக் கொடுத்திருக்கலாம்.

நம்முடைய கடவுள் ஏழைகளின் கடவுள், ஒடுக்கப்பட்டவர்களின் கடவுள். அதுபோலதான் கடவுளின் தாயும் நம் தாயுமான அன்னை மரியாளும். அதனால்தான் இந்த உலகமே இரண்டாம் தர மக்களாக நடத்தக்கூடிய பெண்ணுக்கு காட்சிக் கொடுத்தார். படித்த மேதைகள் பல இருக்க ஒதுக்கப்பட்ட படிக்காத பெண்ணிற்கு காட்சிக் கொடுத்தார். பக்குவம் அடைந்த பெண்மணிக்கு காட்சிக் கொடுக்காமல் வளர்ந்து வரும் சிறுமிக்கு காட்சிக் கொடுத்தார். அன்னைக் கொடுத்த அந்த காட்சிகள் அந்த சிறுமியை படிக்க வைத்தது, பக்குவம் அடைய செய்தது, துறவியாக மாற்றியது இறுதியாக அவரை புனிதையாகவும் மாற்றியது. இந்தப் புனிதைக்கு இந்தியாவில் ஒரே ஒரு ஆலயம்தான் அர்ப்பணிக்கப்பட்டிருக்கின்றது, அதுவும் நம்முடைய தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம் மங்கலக்குன்றில் அமைந்துள்ளது.

**காட்சிகள் பல தந்தாய் அன்னையே**
**எங்களை உம் சாட்சியாய் ஏற்றுக்கொள்வாய்**





ஜீவமாதாவிடம் அழுது மன்றாடினேன். அம்மா தாயே என் மகளைக் காப்பாற்றிக் கொடும்மா என்று மடிப்பிச்சை கேட்டேன். மாதாவின் கருணையால் மகளுக்கு நற்சுகம் கிடைத்தது நன்றி அம்மா. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

2022-ல் என் மச்சானுக்கு திருமணம் நடந்தது. குழந்தை பாக்கியம் இல்லாமலிருந்தார்கள். நான் ஜீவமாதாவிடம் அவர்களுக்காக விண்ணப்பித்தேன். மழலை வரம் தந்த மாதாவிற்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

கடந்த வருடம் என் கணவருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. நான் ஜீவமாதாவிடம் விண்ணப்பித்தேன். அன்னையின் அருளால் அற்புத சுகம் கடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

என் அக்காவாவிற்கு திருமணம் முடிந்து குடும்பத் தகராறு காரணமாக என் பாட்டி வீட்டில் இருந்தார். குடும்பம் ஒன்றுசேர வேண்டுமென்று மாதாவிடம் விண்ணப்பித்தேன். அதேபோன்று குடும்பம் ஒன்றுசேர்ந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

எனக்கு இரண்டு மகள்கள். என் தாய் ஜீவமாதாவின் கருணையால் கிடைத்த குழந்தைகள். என் மகளுக்கு உடல் நிலை சரியில்லை. மாதாவிடம் விண்ணப்பித்தேன் குணமளித்ததற்கு நன்றி அம்மா. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்**

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.

1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. மேரி ஜீவா
சோழிங்கநல்லூர், சென்னை

ஜனவரி மாதம் 6 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**விண்ணரசி**

எனக்கு 2021 –ம் ஆண்டு திருமணம் நடந்தது. நான் கருத்தரித்தேன் ஆனால் குழந்தை இறந்தது. நான் ஜீவமாதாவிடம் மன்றாடினேன். அதேபோன்று எனக்கு அழகான பெண் குழந்தை கிடைத்தது. மேலும் என் கணவருக்கு (Piles) நோய் வந்ததால் நிலைகுலைந்து போயிருந்தார். என் கணவருக்கு நற்சுகம் தரும்படி அன்னையிடம் வேண்டினேன். நல்ல சுகம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**பிரேமா, ஜான்சன் - திருமுல்லைவாயல்**

எனக்கு திருமணமாகி ஒன்றரை வருடம் ஆகிறது. மழலை செல்வம் இல்லாமலிருந்தது. என் கணவரின் நண்பர் மூலமாக ஜீவமாதாவைப் பற்றி அறிந்து மாதாவிடம் மன்றாடினேன். அதேபோல் குழந்தை வரம் கிடைத்தது. ஏழு மாதம் பயமில்லாமலிருந்தேன். குழந்தை பிறக்கப் போகின்ற நாட்கள் வந்தபோது மிகுந்த வேதனையாக இருந்தது. என்னை மருத்துவமனையில் அனுமதித்தபோது ஜீவமாதாவிடம் வேண்டிக் கொண்டேன். நல்ல முறையில் குழந்தை பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜானகி**

என் மகனுடைய மகளுக்கு ஜுரம் வந்தது. என் மகளை மருத்துவரிடம் அழைத்துச் சென்றேன். மாத்திரை கொடுத்தார்கள் சரியாகவில்லை. திரும்ப மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். இரத்தப் பரிசோதனை செய்து பார்த்ததில் டெங்கு காய்ச்சல் இருக்கிறது என்றும், உடல்நிலை மோசமாக இருக்கிறது என்றும் சொன்னார்கள். வயிறு வீங்கிப் போயிற்று. வயிறு சம்பந்தமாக அனைத்து சோதனைகள் செய்தார்கள். டெங்கு காய்ச்சல் அதிகமாக உள்ளது. நிறைய செலவு ஆகும் என்றார்கள். நான் என்ன செய்வதென்று தெரியாமல்





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



**மரியாள் - முதல் சீடர்**

ஒரு ஆசிரமத்தில் பல சீடர்கள் பயிற்சி பெற்று கொண்டிருந்தார்கள். பயிற்சியின் இறுதிகாலத்தில் சீடர்களின் மனவலிமையை பரிசோதிக்க குரு முன்வந்தார். குரு சீடர்களை அழைத்து ஒரு வேலையைக் கொடுத்தார். அருகில் இருக்கும் மலை உச்சிக்கு சென்று அங்கு இருக்கும் ஒரு குறிப்பிட்ட மரத்தின் கனியை பறித்து கொண்டுவரச் சொன்னார். குரு, சீடர்கள் மலை உச்சிக்கு சென்றனர், குறிப்பிட்ட மரத்தை நெருங்கினர். அந்த மரத்தை சுற்றி மிக உயரமான மதில்சுவர் இருந்தது, அந்த மதில்சுவர் மீது யாரும் ஏறமுடியாத வகையில் கட்டப்பட்டிருந்தது. அந்த சுவற்றில் ஒரு நுழைவு வாயில் இருந்தது, அதை ஒரு மிகப் பெரிய பாறையால் மூடி வைத்திருந்தனர். சீடர்கள் அனைவரும் சேர்ந்து அந்த பாறையை அகற்ற முயன்றனர், ஒருநாள் முழுவதும் முயற்சி செய்தும் முடியவில்லை, சீடர்கள் தோல்வியுடன் ஆசிரமத்திற்கு திரும்ப செல்ல முடிவெடுத்தனர். ஆனால் ஒரு சீடர் மட்டும் அந்தப் பாறையை அகற்ற முயற்சி செய்து கொண்டே இருந்தார். மற்ற சீடர்கள் எல்லாம் இவரைப் பார்த்து அனைவரும் சேர்ந்து பாறையை அகற்ற முடியவில்லை, தனியாக என்ன செய்யப் போகிறாய் என்று ஏளனமாக சிரித்தனர். மற்ற சீடர்கள் ஆசிரமத்திற்கு வந்து தங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டனர். ஒருவன் மட்டும் முட்டாளைப் போன்று தனியாக பாறையை அகற்ற முயற்சிக்கிறான் என்று சொல்லி சிரித்தனர். அது மாலை வேளை ஆகவே குரு பதற்றமடைந்தார், சீடர்களை கூட்டிக்கொண்டு மலையின் உச்சிக்கு சென்றார், அங்கு சீடர் தனியாக முயற்சிப்பதை குரு கண்டார். சீடரைப் பார்த்து ஏன் இப்படி செய்கிறாய் என்று குரு கேட்டார். அதற்கு சீடன் உம் கட்டளையை நிறைவேற்றாமல் நான் திரும்ப மாட்டேன் என்றான். குரு உன்னால் எப்படி பாறையை அகற்ற முடியும் என்று கேட்டார். சீடன் குருவே என்னால் இது முடியாது, ஆகவேதான் உங்களை இங்கு வரவைத்தேன் நீங்கள் நினைத்தால் இந்த பாறையை அகற்ற முடியும், ஆகவே அகற்றுங்கள் என்று கூறினான். குரு அந்த பாறையை தொட்டார் அது இரண்டாகப் பிளந்தது, சீடன் உள்ளே சென்று மரத்தின் கனியை பறித்து குருவிடம் கொடுத்தான். அன்னை மரியாள் முதல் சீடராக இருக்கிறார். இறைத்திட்டத்திற்கு தன்னை முழுவதும் ஒப்புக்கொடுத்து தன்னை வென்றவர், அதனால் விண்ணையும் வென்றவர். இறைவனை இவ்வுலகத்திற்கு பெற்றுக் கொடுத்த திறவுகோலாக இருந்து, கிறிஸ்து இவ்வுலகை மீட்க வழிவகுத்தார். கடவுள் மரியாவை மீட்பரின் தாயாக ஆதியிலேயே முன்குறித்து காலம் கனிந்தபோது வானதூதர் வழியாக அழைப்பு விடுத்து ஆகட்டும் என்ற அவரது சொல்லால் மீட்புத்திட்டத்தில் தமக்கு ஏற்புடையவராக்கி ஆன்மாவோடும் உடலோடும் விண்ணக மாட்சியில் பங்குபெற செய்தார். புனித பவுல் இயேசுவை நாம் தனிப்பெரும் தலைமைக் குருவாகக் கொண்டுள்ளோம் (எபி 4:14). உண்மை சீடத்துவம் என்பது வாழ்ந்து காட்டுவதில் இருக்கிறது. நமது சீடத்துவத்தை கன்னி மரியாவிடம் இருந்து கற்றுக் கொள்கிறோம். மரியாவின் பண்பு நலன்களை ஏற்று நல்ல சீடர்களாக வாழ முயற்சிப்போம்.

# ஊழியரின் அன்னையும் அரசியுமான மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

தூய ஆவியாரின் உள்ளொளியால் தூண்டப் பெற்று திருஅவையில் அநேக துறவற சபைகள் உருவாகியுள்ளன. ஆற்றின் இரு மருங்கிலும் நடப்பட்ட மரங்கள் போன்று திருஅவைக்கு இவைகள் ஆன்மீக வளமும் செழுமையும் சேர்க்கின்றன. காலத்தின் அறிகுறிகள் சுட்டிக்காட்டுகின்ற திருஅவையின், சமுதாயத்தின் தேவைகளுக்கும் ஏற்ப இச்சபைகளின் வாழ்விலும் பணிகளிலும் பரிணாம வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. இயேசுவின் காலத்திற்கு முன்பும், அவரது சமகாலத்திலும் குகைகளில் வாழ்ந்த எஸேனியர் என்ற யூதத்துறவியர் குழுவிலிருந்து இன்றைய மறைபரப்புப் பணியாளர்கள் வரை அநேக துறவற சபைகள் தோன்றியும் மறைந்தும் வருகின்றன. பாலைவனத் தந்தையர், மடாலயத் துறவு, யாசிக்கும் துறவியர், அடைபட்ட வாழ்வு, தியான யோக வாழ்வு, அப்போஸ்தலப் பணி, மறைபரப்புப் பணி என துறவற சபைகளின் வளர்ச்சி நம்மை வியக்க வைக்கின்றது. பதிமூன்றாம் நூற்றாண்டில் மிகவும் புகழ்பெற்று விளங்கிய துறவற சபைகளான பிரான்சிஸ்கன், டொமினிக்கன் மற்றும் மரியின் ஊழியர் சபையினரைப் பற்றி நாம் அறிவோம். மரியின் ஊழியர் சபையைத் தோற்றுவித்த ஏழு புனிதர்களின் விழா பெப்ருவரி 17 ஆம் நாள் சிறப்பிக்கப்படுகின்றது. இச்சபையின் தோற்றத்தில் மரியாவின் ஈடுபாடு, வழிநடத்துதல் ஆகியவற்றை நினைத்து மரியின் ஊழியர் சபையின் உறுப்பினர் பெருமிதம் அடைகின்றனர். இவர்கள் மரியாவை தங்களின் அன்னையாகவும் அரசியாகவும் அன்பொழுக அழைக்கின்றனர். ஏழு புனிதர்கள் வழியாக மரியா திருஅவைக்கும், அதன் மக்களுக்கும் விடுக்கும் அழைப்பு செய்தி, அவரின் எதிர்பார்ப்பு, ஆகியவற்றை இக்கட்டுரையில் காண்போம்.

**ஏழு புனிதர்கள்**

திருஅவையின் வாழ்விலே துறவற சபை எதுவும் ஒரு குழுவாக ஏற்படுத்தப்படுத்தப்பட்டிருப்பதை நாம் அறிந்ததில்லை. ஆனால் மரியின் ஊழியர் சபையின் மிகச் சிறப்பான அம்சம், இது ஒரு குழுவினரால் உருவாக்கப்பட்டது. பிளாரன்ஸ் நகரில் புகழ்பெற்று விளங்கிய ஏழு வணிகர்கள் இச்சபைக்கு வித்திட்டனர். அவர்களின் பெயர்களாவன: போன்.ஃபீலியுஸ், அலெக்சிஸ், மனேத்துஸ், அமிதேயுஸ், ஹியு, சோஸ்தேனெ மற்றும் போனஜுந்தா. இக்குழுவில் இருவர் திருமணமானவர். அன்றைய திருஅவையில் நிலவிய ஏற்றத்தாழ்வு, ஏழ்மையின் மீது காணப்பட்ட பற்றற்ற தன்மை, அதிகாரப் போட்டி இவற்றைக் கண்ணுற்று, இவற்றிற்கு மாற்றாக ஒரு வாழ்வினை மேற்கொள்ள இவர்கள் விரும்பினர். இறைவேண்டலிலும் தவத்திலும் ஈடுபட்டனர். நமது அன்னை மரியா இவர்களை வழிநடத்தினார். இவ்வாறு மரியின் ஊழியர் சபை 1233 ஆம் ஆண்டு இம்மண்ணில் மலர்ந்தது. இன்று உலகமெங்கும் பரவி மணம் பரப்புகின்றது. இன்றும் இச்சபை திருஅவையிலும், இன்றைய சமுதாயத்திலும் மாற்றங்கள் ஏற்படக் காரணமாக இருக்கின்றது.

**ஊழியர் சபையின் தோற்றம்**

13 ஆம் நூற்றாண்டு வரை எந்த ஒரு துறவற சபையும் மரியாவுக்கு ஒப்புக் கொடுக்கப்படவில்லை. ஆனால் மரியின் ஊழியர் சபை, மரியாவால்





நேயர்தம் பசியினை நினைத்தூட்டுபவள் அன்னை மரியா
தானே முன் சென்று உதவும் பண்புடையாள் நம் தாய்
வயது முதிர்ந்த எலிசபெத்தின் தேவை அறிந்தவள்
திருமண வீட்டின் திராட்சை ரசத்
தட்டுப்பாட்டை அறிந்து உதவியவள்
இயேசு நோயுற்றோரைக் குணமாக்கினார்
தேவை அறிந்து இரங்கும் குணம்
மைந்தனுக்குத் தாயிடமிருந்து வந்ததோ
உலகின் தேவைகளை நினைந்து
விண்ணிலிருந்து இறங்கி வந்து
மசபியேல் குகையினில் தோன்றி
சிறுமி பெர்நதத்துக்குக் காட்சிதந்து
மகனின் குணமளிக்கும் பணியில்
தமக்கும் பங்குண்டு என்பதைக் காட்ட
நீரூற்றைச் சுட்டிக்காட்டி
சிறுமியை அருந்தச் சொன்னவள் நம் அன்னை
இன்றும்.....
லூர்து நகர் நாடி வரும்
ஆயிரம் ஆயிரம் மக்களுக்கு
உடல், உள்ள நலமளித்து வருபவள் நம் அன்னை
பிப்ரவரி 11-ம் நாள் - நாம்
அன்னைக்கு விழா எடுத்து மகிழ்கின்றோம்
எப்பொழுதெல்லாம் உலகிற்கு
அன்னையின் கருணை தேவையோ
அப்பொழுதெல்லாம் விண்ணிலிருந்து
இறங்கி வந்து பல்வேறு இடங்களில் காட்சி தந்து
உலகை அரவணைப்பவள் நம் அன்னை
இப்புதிய ஆண்டில்....
இறைவன் நம்மோடு இருந்திடல் வேண்டும்
நடப்பவை இனிதே நடந்திடல் வேண்டும்
தடைகள் யாவும் நீங்கிடல் வேண்டும்
உறவுகள் நாளும் வளர்ந்திடல் வேண்டும்
இதயங்கள் கோவில் ஆகிடல் வேண்டும்
அன்னை தம் மைந்தனை அணைப்பது போல
அன்னையவர் நம்மையும் அணைத்திடல் வேண்டும்
நாம் மகிழ்ந்திடல் வேண்டும் வாழ்ந்திடல் வேண்டும்
அன்னையின் அரவணைப்பில்

# அன்னையின் அரவணைப்பில்

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

அம்மா இது அடிமன ஆழத்தின் அன்பொலி
அம்மா என்னும் அழகிய சொல் ஒலியில்தான்
எத்துணை இனிமை எத்துணை மென்மை
எத்தனை கனிவு எத்தனை பொலிவு
எத்தனை பொருள் பதிவு
அம்மா, மாதாஜி, மாயி, Mom, Mummy என
வெவ்வேறு மொழிகளிலும்
அம்மா என்னும் பொருள் தரும் சொல்லில்
ம கரம் நின்று இன்னொலி தருகின்றதே
கன்று தாய்ப்பசுவை ம்மா என அழைக்கையில்
தாயின் மடி சுரந்து நிறைகின்றதே
அம்மா என்னும் இனிய சொல்லுக்கு
விலங்குகளும் விதிவிலக்கல்ல.

அன்னையின் உறவில்தான் அனைத்துயிரும் மலர்கின்றன.
தாய் உயிரின் பணயம் குழந்தையின் பிறப்பு
தாயே அனைத்து உயிர்களின் முதற்பொருள்
தாயின் இரத்தமே...
குழந்தைக்குப் பாலாக, உணவாக,
நோய் தீர்க்கும் மருந்தாக,
உயிராக, உறவாக, உடலாகும் சதையாக
குழந்தையுடன் ஒன்றாகிறது.

அன்னையரில் முதன்மையான அன்னையாக
அன்னையவர் யாவருக்கும் அன்னையாக
ஒளிர்பவள் அன்னை மரியா
இந்த அன்னையின் உள்ளம்
தரணிக்குத் தரப்பட்ட அருள் வெள்ளம்
ஆண்டவன் அளித்த அன்பு இல்லம்
ஆண்டவனைக் காணும் இன்ப ஆலயம்
பாருலகைப் பரலோகப் பாதையில்
இட்டுச் செல்லும் விண்மீன்.

பெற்ற தாயினும் சாலப் பரிந்து





தொடங்கப்பட்டு, அவருக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இச்சபையின் தோற்ற வரலாற்றில் மரியா வழியாக இறைவன் செயல்படும் விதத்தை அறிய முடிகிறது. 1233 ஆம் ஆண்டு, அன்னையின் விண்ணேற்பு விழாவான ஆகஸ்ட் 15 ஆம் நாளுக்கு முந்தின மாலையில் ஒருமித்த மனம் கொண்ட எழுவரும் ஆழ்ந்த செபத்தில் ஈடுபட்டிருந்த வேளை, மரியா ஒரு காட்சியினை அவர்களுக்கு வழங்கினார். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஒரே வேளையில் இக்காட்சி அருளப்பட்டது. மிகவும் பிரகாசமான ஒளியில் விண்ணக அரசி மிக அழகாகத் தோற்றமளித்தார். வானதூதர் புடைசூழ்ந்து நின்றனர். மரியா ஒவ்வொருவரையும் பார்த்து 'இவ்வுலகத்தை விட்டு தனிமையை நாடிச் செல்லுங்கள். இறைவனுக்காக மட்டும் வாழுங்கள். நீங்கள் விண்ணக ஆறுதலை அடைவீர்கள். என்னுடைய அரவணைப்பும், பாதுகாப்பும் உதவியும் என்றும் உங்களோடு இருக்கும்" என்று கூற அக்காட்சி மெதுவாக மறைந்தது. ஒவ்வொருவரும் மற்றவருக்கு இது அருளப்பட்டதா என்று அறிய ஒருவரையொருவர் நோக்கினர். இதை வெளிப்படுத்தலாமா என்ற அச்சமும் அவர்களிடத்தில் நிலவியது. இறுதியாக அவர்களின் மூத்தவரான போன்பீலியுஸ் துணிவுடனும், தாழ்ச்சியுடனும், பணிவுடனும் தான் கண்ட காட்சியை விவரிக்க, மற்றவர்களும் ஆச்சரியத்தால் தாம் கண்டதைப் பகிர்ந்து கொண்டனர். உடனே எழுவரும் மண்டியிட்டு, மார்பில் அடித்துக்கொண்டு இறைவனின் அழைப்பிற்கு அடிபணிய, இவ்வுலகத்தைத் துறக்க முடிவெடுத்தனர்.

ஏழு புனிதர்களும் தங்களின் ஆன்மீகக் குருவான ஜேம்ஸ் பொகி போன்சியுடனும், பிளாரன்ஸ் ஆயரிடமும் இக்காட்சியைப் பற்றித் தெரிவித்தனர். அவர்களும் இதை ஏற்றுக் கொண்டனர். இம்மகிழ்வான செய்தியை தம் உறவினர்களிடம் தெரிவிக்க, அவர்களும் வியப்புற்றனர். எழுவரில் இருவர் திருமணமானவர்களாகியிருந்தனர். இரு மனைவியரும் துறவற சபையை மேற்கொண்டனர். எழுவரும் தங்களின் உடமைகளை அனைத்தையும் விற்றுவிட்டு ஏழைகளுக்கு பகிர்ந்தளித்தனர். இயேசுவை முழுமையாகப் பின்பற்ற துறவுப்பயணத்தை மேற்கொண்டனர். அதே ஆண்டு செப்டம்பர் எட்டாம் நாள் நமது அன்னை பிறந்த திருவிழாவன்று விலையுயர்ந்த ஆடைகளைக் களைந்து விட்டு, மடாலயத் துறவியருக்குரிய ஆடைகளை அணிந்து கொண்டு, நகருக்கு வெளியே அமைந்திருந்த தனிமையான ஒரு வீட்டில் தம் வாழ்வைத் தொடங்கினர். போன்பீலியுஸ் இல்லத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். புதிதாக சபையைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடத்தில் இல்லை. எனவே அன்னை மரியா கூறியவாறு செபம், தியானம், தவம் முயற்சியில் ஈடுபட்டுத் தம்மைத் தூய்மைப்படுத்தினர். முக்கியமாக சனிக்கிழமைகளில் மரியாக்கு சிறப்பாக வணக்கம் செலுத்தினர். தாழ்ச்சியை அதிகமாக பயிற்சிக்க விரும்பினர். வீடு வீடாகச் சென்று யாசகம் செய்து உணவைப் பெற ஆயரிடம் உத்தரவு பெற்றனர். இவ்வாறு செல்கையில் சிறு குழந்தைகள் மரியின் ஊழியரைப் பாருங்கள் என்று அடையாளம் காட்டியதாக அவர்களின் வரலாறு கூறுகிறது. மரியின் ஊழியர் சபையில் உயர்ந்த தலைவராக விளங்கிய புனித பிலிப்பு பெனிசியார் ஐந்து மாதக் குழந்தையாக தன் தாயின் கரத்தில் இருந்த போது 'மரியின் ஊழியருக்கு தர்மம் கொடுங்கள்" என்று தன் தாயிடம் கூறியதும் உண்மையான நிகழ்வாகக் கருதப்படுகிறது.

**மரியின் ஊழியர் சபை**

அன்னை மரியா அறிவுறுத்தியபடியே, ஏழு புனிதர்களும் தனிமையை நாடி பிளாரன்ஸ் நகரின் வெளியே அமைந்திருந்த மவுண்ட் செனாரியோ என்ற அழகிய மலையில் நீடித்த அமைதியிலும், தனிமை ஏகாந்தத்திலும், ஆழ்ந்த தியானத்திலும் ஈடுபட்டிருந்தனர். அநேக இளைஞர்கள் இவர்களின் எடுத்துக்காட்டான வாழ்வைக் கண்ணுற்று, துறவு வாழ்வை மேற்கொள்ள விரும்பினர். ஆனால் இந்த எழுவரும் எந்தவிதமான சபையையும் நிறுவுவதற்கு

தயாராக இல்லை என்பதை வெளிப்படையாகக் கூறினர். ஆனால் அன்னை மரியா இவர்களுக்கென்று இறைவனின் திட்டத்தை வெளிப்படுத்தக் காத்திருந்தார். 1239 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் நாள் புனித வாரத்தில் பெரிய வெள்ளிக்கிழமை அன்று இரவு ஏழு புனிதர்களும் இயேசுவின் பாடுகளை ஆழ்ந்து தியானித்துக் கொண்டிருந்தபோது அவர்களின் விண்ணகப் பாதுகாவலி காட்சியில் தோன்றினார். அன்றைய நாள் இயேசுவின் பிறப்பின் அறிவிப்பின் நாளாகவும் அமைந்திருந்தது. நமது அன்னை வானதூதர்களால் சூழப்பட்டுக் காணப்பட்டார். கரங்களில் கருப்பு நிற உடையைத் தாங்கியிருந்தார். வானதூதர்களில் ஒருவர் ஒழுங்கு புத்தகத்தையும், வேறொருவர் ஏட்டுச்சுருளையும், மற்றும் ஒருவர் குருத்து ஓலையையும் ஏந்தியவர்களாய் காணப்பட்டனர். எழுவரும் அன்னையை ஆச்சரியத்துடன் உற்றுப் பார்த்து பரவசம் அடைந்த நிலையில் இருக்கும்போது பின்வரும் அறிவுரையை அவர்களுக்கு வழங்கினார். ‘தேர்ந்தெடுக்கப்பட்ட எனதன்பு ஊழியர்களே, உங்களின் வேண்டுதல்களை நான் கேட்டேன். இந்த கருப்பு நிற ஆடையை அணிந்து கொள்ளுங்கள். எனது மகன் பாடுகள், மரணத்தின் பொழுது நான் அடைந்த துன்பங்களை உங்களுக்கு இந்த கருப்பு நிற ஆடை நினைவுபடுத்துவதாக. இந்த சுருளில் எழுதப்பட்டிருக்கும் மரியின் ஊழியர் என்பதே உங்கள் பெயராக இருக்கட்டும். புனித அகுஸ்தினாரின் இந்த கொள்கை நூலைப் பின்பற்றி வாழ்ந்து எனக்குப் பிரமாணிக்கமாக ஊழியம் செய்தால், விண்ணகத்தில் இந்த குருத்தோலையைப் பரிசாகப் பெறுவீர்கள்”. இவ்விதமாக அன்னை மரியா ஊழியர் சபையைத் தோற்றுவித்தார். இச்செய்தியினை மரியா ஆயருக்கும் அறிவித்தார். ஆயரும் இக்குழுவை ஒரு சபையாக பிரகடனப்படுத்தினார். புனித அலெக்சிஸ் ஃபல்கோனேரியைத் தவிர மற்ற ஆறு பேரும் அருட்பணியாளர்களாக மாற தங்களைத் தயார்படுத்தினார்கள். மரியின் ஊழியரின் பெண்கள் சபையின் முதல் தலைவியான புனித ஜூலியானா ஃபல்கோனேரி, புனித அலெக்சிஸ் என்பவரின் சகோதரரின் மகள் என்பது நமக்குப் பெருமையாக இருக்கிறது.

**ஊழியர் அன்னை கற்றுத்தரும் பாடங்கள்**

அன்னை மரியா, மரியின் ஊழியர் சபையை ஏற்படுத்தி, அதை தனது அன்பு முக்காட்டினுள் வைத்து, அரவணைத்து வழிநடத்திக் கொண்டிருக்கிறார். அவரின் இந்த ஈடுபாட்டு முயற்சிகள் பொதுநிலையினருக்கும், தம்மை முழுமையாக அர்ப்பணித்திருக்கும் துறவறத்தாருக்கும் நிறைய பாடங்களைக் கற்றுத் தருகின்றன. திருமுழுக்கின் போது அனைவரும் கிறிஸ்தவர்களாக வாழ அழைப்பைப் பெறுகிறோம். அதை நற்செய்தியின் அடிப்படையில் சிறப்பாக வாழவும் நமக்கு அருட்சாதனங்கள் வழி அருள் வரங்கள் பொழியப்படுகின்றன. நமது ஏழு புனிதர்களும் தங்களின் கிறிஸ்தவ வாழ்வை இறைவனுக்கு உகந்தவராய் வாழ்ந்தனர். செப, தவ முயற்சிகளில் தங்களை ஈடுபடுத்தினர். தம் செல்வங்களை ஏழைகளோடு பகிர்ந்து கொண்டனர். இவ்வாறு அவர்களின் விசுவாச வாழ்வும், இரக்கச் செயல்பாடுகளும் இணைந்தே சென்றன.

இரண்டாவதாக, இந்த எழுவரும் அதிக செல்வந்தர்களாகவும், பிளாரன்ஸ் நகரிலே புகழ்பெற்ற வணிகப் பெருமக்களாகவும் இருந்த போதிலும், அதில் பற்றற்றவர்களாக வாழ்ந்தனர். செல்வம், புகழ், பெருமை இவற்றின் நிலையாத் தன்மையை நன்கு உணர்ந்திருந்தார்கள். எனவே என்றும் நிலைக்கும் விண்ணகச் செல்வங்களைச் சேர்ப்பதிலும் உண்மையுள்ளவர்களாக இருந்தனர்.

மூன்றாவதாக இப்புனிதர்களின் ஆன்மீக வாழ்வு, அன்றைய திருஅவையிலும், சமுதாயத்திலும் கிறிஸ்துவின் மதிப்பீடுகளை மறந்திருந்த வாழ்வுமுறையை கேள்விக்குட்படுத்தியது. செல்வம் அந்தஸ்து ஆகியவற்றின் மீது கொண்டிருந்த இறைவனுக்கு விருப்பம் இல்லாத உலகப்போக்கைக் கண்டு அதிர்ச்சியுற்றனர். தாங்களும் இந்த வலையில் விழாதபடி, தங்களின் ஆன்மாவைக் காக்க விரும்பினர். இத்தகைய ஒரு மாற்றுப் பண்பாட்டை உருவாக்க விரும்பினர். எளிமையான, தாழ்மையான கிறிஸ்துவைப் பின்பற்ற முனைந்தனர். நமது கிறிஸ்தவ வாழ்வும் வெறும் ஆன்மீக காரியங்களில் நிறைவு பெறாது, நம்மைச் சுற்றி நடக்கும் ஏற்றத்தாழ்வுகள், அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க நம்மைத் தூண்ட வேண்டும்.

நான்காவதாக அன்னை மரியா வழியாக இறையழைப்பை இறைவன் உணர்த்தியபோது மனமுவந்து அதை ஏற்றுக் கொண்டனர். தூய கீழ்படிதலை வெளிப்படுத்தினர். அனைத்து செல்வங்களையும் குப்பையெனக் கருதினர். கிறிஸ்துவில் உண்மையான செல்வத்தைக் கண்டனர். இன்றும் நமக்கும் அழைப்பு தரப்படுகிறது. தூய ஆவியார் பல வகைகளில் இயேசுவின் நற்செய்தியைப் பறைசாற்ற நமக்கு

தொடர்ச்சி 23-ம் பக்கம்.........





பிறந்தநாளை சீரும் சிறப்புமாக கொண்டாடுகிறார்கள். அது மட்டுமல்லாமல் தங்கள் கடவுளுக்கு காவடி எடுத்து நடந்து செல்லும் அதே பக்தர்கள் நம் மாதாவுக்காக வேளாங்கண்ணி நோக்கி நடை பயணமாக செல்வதை நாம் ஒவ்வொரு வருடமும் கண்டு பூரிப்படைகிறோம்.

அவர்கள் மரியாளை தெய்வமாக மட்டும் பார்க்காமல் தங்கள் தாயாகவும் சகோதரியாகவும் மகளாகவும் பாவித்து அன்பு செலுத்துகிறார்கள். சில நாட்களில் நம்முடைய திருத்தலங்கள் பலவற்றில் நம் கத்தோலிக்க சகோதரர்களை விட இந்து மதத்தைச் சார்ந்தவர்களே அதிகம் காணப்படுவது வியப்பாக இருக்கிறது. நாம் மரியாவின் மீது அதிக விசுவாசம் கொண்டிருக்கிறோம். அதேபோல அவர்கள் மரியாவின் மீது தீவிர பக்தி கொண்டிருக்கிறார்கள். நம் சகோதர சபையை சார்ந்தவர்கள் மாதாவை ஏற்றுக் கொள்ள மறுத்தாலும் அவளை மதிக்க தயங்குவதில்லை. நம் கத்தோலிக்க திருச்சபையும் மாதாவின் பக்தி என்பதை திரு யாத்திரை மேற்கொள்வதிலும் ஜெபமாலை ஜெபிப்பதிலும் வணக்க மாதங்களை கொண்டாடுவதில் மட்டும் அடங்கிவிடாமல் நம் வாழ்க்கை தரத்தை மாற்றி நம் மனமாற்றத்திற்கு கொண்டு சென்று இறையரசை கட்டிட உதவிட வேண்டும். அன்னை மரியாவை தெய்வ நிலைக்கு உயர்த்தி தூரத்தில் வைத்து விடாமல் அன்னையை நம்மை போல ஒரு மனித பெண்மணியாக நம் சகோதரியாக என்றென்றும் இறை அருள் நிரப்பப்பட்டவர்கள் என்ற எண்ணத்தை மனதில் கொண்டு தந்தையாம் இறைவனுக்கு மகளாகவும் மீட்பு திட்டத்தில் அவரோடு ஒத்துழைத்த முதல் சீடர் என்ற எண்ணத்தை கருத்தில் கொண்டு அன்னையின் பக்தியை மேலோட்டமான பக்தி பரவசமாக எடுத்துக் கொள்ளாமல் வேரோட்டமாக மரியின் வாழ்வை தங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு பயணித்திட வேண்டும். இந்த மரியாள் ஆனவள் இயேசுவுக்கு பின்னால் செல்லும் அன்பு நிறை சீடராகவும் இயேசுவுக்கு முன்னால் செல்லும் ஆகச் சிறந்த திருத்தூதராகவும் இயங்குகின்றார் நம் திரு அவையை உயிருள்ள ஒரு இறை இயக்கம் ஆக்கி செயல்பட வைக்கிறார். திருச்சபையை பொருத்தவரை மரியா ஒரு தவிர்க்க முடியாத முதன்மையான இடத்தை பெற்றுள்ளார் அதை மனதில் கொண்டு நம் அன்னையின் மேன்மையினை இந்த உலகத்தார் அனைவரின் மனதினிலும் ஆழமாக பதியச் செய்ய நாம் அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும் அதுவே நாம் அன்னைக்கு செலுத்தும் வணக்கமாகும்



## பொதுநிலையினரின் பார்வையில் மரியா ⑫

திரு. பரிசுத்தமணி சோழிங்கநல்லூர், சென்னை

**மரியா ஒரு சமூக பார்வை**

மரியா எவ்வளவு அழகான பெயர். பெயர் மட்டுமா அழகு? மரியாவின் தோற்றமே உலகில் உள்ள எல்லா பெண்களை விடவும் மிகவும் அழகானது. அப்படிப்பட்ட அழகும் அருளும் நிறைந்தவள் நம் அன்னையாக வாய்த்தால் நம் மனது எவ்வளவு நிறைவடையும். அது மட்டும் அல்லாமல் அவள் இந்த உலகத்திற்கே அன்னையாக வாய்த்திருப்பது எவ்வளவு பெரிய பெருமிதம். எவ்வளவு பெரிய பாக்கியம். அப்படிப்பட்ட நம் அன்னையை இந்த சமூகம் எப்படி நோக்குகிறது. நமது சகோதர மதமாகிய இஸ்லாத்தின் புனித நூலான குர்ஆனில் நமது அன்னையை மரியம் என பெயர் கொண்டு அழைக்கின்றனர். அவளது பெயர் ஏறக்குறைய 70 இடங்களில் அந்த திரு நூலில் காணப்படுகிறது மரியாளின் மீது கொண்ட பற்றினாலும் அன்பினாலும் மதிப்பினாலும் திருக்குரானில் அவளது பெயர் இத்தனை இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவே அவர்கள் மரியாவின் மீது கொண்ட மதிப்பை உணர்த்துகிறது

மரியாள் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட பெண்ணாக திருக்குரானில் சொல்லப்பட்டிருக்கிறது. திருக்குரானில் காணப்படும் ஒரே பெண்ணின் பெயராக மரியாளின் பெயர் இருப்பது நம் எல்லோருக்கும் பெருமைக்குரியது.

நம் இந்து சகோதரர்களை எடுத்துக் கொண்டால் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் தென்னிந்தியாவின் பல பகுதியில் இருந்து ஏன் இந்தியாவின் மற்ற பகுதிகளில் இருந்தும் மரியாளின் மீது தீவிர பக்தி கொண்டு அவளது திருத்தலங்களுக்கு வந்து வணங்கி மகிழ்வதை நாம் கண்கூடாக காண்கிறோம். குறிப்பாக நமது வட சென்னையில் சில பகுதிகளில் நம் இந்து சகோதரர்கள் மாதாவுக்கென தம் சொந்த செலவில் திருச்சபையையும் தாண்டி பல மாதாவின் கெபிகளை நிறுவி வழிபட்டு வருவதோடு மட்டுமல்லாமல் ஆண்டுதோறும் மரியாவின்





# அன்னையின் திருத்தலங்களை நோக்கி... ௨

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



**அன்னை மரியாவின் புனித வீடுள்ள பேராலயம்**

**கருமை நிற அன்னை மரியாள், லொரேத்தோ, இத்தாலி**

அன்னை மரியாள் வாழ்ந்த வீடானது இத்தாலியின் மார்கே பகுதியில் உள்ள லொரேத்தோ பேராலயத்தில் பராமரிக்கப்படுவதாக பாரம்பரியம் கூறுகிறது. அன்னை மரியாள் நாசரேத்தில் வாழ்ந்த இல்லமானது, வானதூதர்களால் எடுத்துவரப்பட்டு முதலில் குரோவேசியா நாட்டிலுள்ள தெர்சாத்தோ என்ற இடத்திற்கு கொண்டுவரப்பட்டதாகவும், பின் அங்கிருந்து இத்தாலியில் உள்ள ரெகனாத்தி என்ற இடத்திற்கும், இறுதியாக, தற்போதுள்ள லொரேத்தே நகருக்கு கொண்டுவரப்பட்டதாகவும் பராம்பரிய செய்திகள் உள்ளன.

அன்னையின் இல்லத்தோடு, இந்த ஆலயத்தில் வீற்றிருக்கும் கரங்களில் குழந்தை இயேசுவை தாங்கியிருக்கும் கருமை நிற அன்னையும் புகழ்பெற்றவராவார். கி.பி. 1920ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் தேதி, திருத்தந்தை பதினைந்தாம் பெனடிக்ட், இந்த அன்னையை விமான பயணிகளின் பாதுகாவலராகவும், நலமான பயணத்திற்கான துணைவராகவும் அறிவித்தார்.

**ஆலயத்தின் வடிவமைப்பு**

அன்னையின் இல்லத்தை கொண்டிருக்கும் இந்த பேராலயமானது கி.பி. 1468ஆம் ஆண்டு நவீன கோதிக் கலையில் கட்டத் தொடங்கினார்கள். இந்த ஆலயம் 93மீட்டர் நீளமும், 60 மீட்டர் அகலமும் கொண்டதாகும். இந்த ஆலயத்தில் உள்ள மணிக்கோபுரம் 75.6 மீட்டர் உயரமுடையதாக அமைந்துள்ளது.

கி.பி. 1586ஆம் ஆண்டு, திருத்தந்தை ஐந்தாம் சிக்ஸ்துஸ் அவர்கள் இந்த ஆலயத்தின் முகப்பை அழகுற அமைத்து, நகரின் மதிற்சுவர்களை எழுப்பி இந்த இடத்திற்கு முழு நகர அந்தஸ்தை அளித்தார். இந்த ஆலயத்திற்கும், இந்நகருக்கும் திருத்தந்தை அவர்கள் செய்ய பணிகளை நினைவுகூரும் விதமாக ஆலயத்தின் வலப்புறத்தில் இவரின் திருஉருவமானது மிகப்பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் மையமுகப்பின் உச்சியில் குழந்தையை கையில் தாங்கியிருக்கும் அன்னையின் திருஉருவமானது காண்போரின் கண்களின் பக்தி உருவாகும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பற்ற அன்னையின் திருஉருவத்தை வடித்தவர் ஜிரோலோமோ லொம்பார்தோ ஆவார். 16ஆம் நூற்றாண்டின் இறுதியில், திருத்தந்தை ஐந்தாம் பவுல் அவர்களின் ஆணைப்படி, ஜிரோலோமோ ஆலயத்தில் முகப்பில் உள்ள மூன்று பித்தளை கதவுகளை சிறந்த வேலைப்பாடுகளுடன் நிறைவுசெய்தார். கி.பி. 1754ல், சிறந்த கட்டிட கலைஞரான லூயிஜி வன்வித்தெல்லியால் அழகுபடுத்தப்பட்ட

மணிக்கோபுரத்தில், கி.பி. 1516ல் திருத்தந்தை 10ம் லியோவால் வழங்கப்பட்ட 11 டன் எடையுள்ள மணியானது பொருத்தப்பட்டது.



ஆலயம் முழுவதும் புகழ்பெற்ற ஓவியர்களான தொமேனிக்சினோ, குய்தோ ரேனி, ர.ஃ.பேயேலே தா மோன்தேலூபோ போன்றோரின் ஓவியங்களால் அழகுற மிளிர்கிறது.

**அன்னையின் இல்லம்**

அன்னை மரியா வாழ்ந்ததாக கருதப்படும் இல்லம் இந்த ஆலயத்தில் பராமரிக்கப்படுகிறது. 14ஆம் நூற்றாண்டிலிருந்து, இந்த இல்லத்தின் காரணமாக, இந்த ஆலயம் ஒரு புகழ்பெற்ற யாத்திரை தலமாக அமைந்துள்ளது.

இங்கு பராமரிக்கப்படும் அன்னையின் இல்லமானது, 31அடி நீளமும், 13அடி அகலமும் கொண்டதாகும். இந்த இல்லத்தின் வடபுறத்தில் ஒரு கதவும், மேற்கு புறத்தில் ஒரு சன்னலும் அமைந்துள்ளன.

மத்தியகால பாரம்பரியத்தின் அடிப்படையில் இந்த வீடானது யூதேயாவில் அன்னை மரியா, புனித சூசை, இயேசு ஆண்டவர் வாழ்ந்த இல்லமாக கருதப்படுகிறது. இந்த இல்லத்தில்தான், ஆண்டவரின் அதிதூதரான கபிரியேல், இயேசுவின் பிறப்பை அன்னை மரியாவுக்கு அறிவித்தார். ஆண்டவரின் விண்ணேற்புக்கு பிறகு, திருத்தூதர்கள் இந்த இல்லத்தில் கூடிவந்ததாகவும், அங்கு திருத்தூதரான பேதுரு அவர்களுடன் இணைந்து திருப்பலி கொண்டாடியதாகவும் பாரம்பரியம் கூறுகிறது. திருத்தூதர் பேதுரு திருப்பலி நிறைவேற்றிய பீடம் உண்மையானது என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இப்பீடமானது, லோரேத்தே நகரின் பேராலயத்தின் உள்ள இல்லத்தில் தற்போது உள்ளது.

பதிமூன்றாம் நூற்றாண்டில் நடைபெற்ற சிலுவைப் போர்களின் போது, இஸ்லாமிய படையெடுப்பாளர்களிடமிருந்து இந்த இல்லமானது காப்பாற்றபட்டு, வானதூதர்களால் தற்போதுள்ள குரோவேசியா நாட்டிலுள்ள தெர்சாத்தோ என்கிற இடத்திற்கு கி.பி. 1291ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டதாக கூறப்படுகிறது. அந்த இடத்தில் அன்னை மரியா காட்சி தந்தார். அங்கு பல்வேறு நோய்களுடனும், தேவைகளுடனும் வந்தவர்களுக்கு குணமும், வேண்டிவை கிடைத்ததும் இந்த இல்லத்தின் புனிதத்துவத்திற்கு சாட்சிகளாக உள்ளன.

கி.பி. 1294ஆம் ஆண்டில் ஆலயத்திற்கு திருப்பயணிகளாக வந்தவர்கள் வழிப்பறிக் கொள்ளையர்களின் தாக்குதலுக்கு உள்ளானதால், மீண்டும் வானதூதர்கள் இந்த இல்லத்தை, இத்தாலியின் அங்கோனா பகுதியில் உள்ள வனப்பகுதிக்கு கொண்டு வந்தனர். இந்த இடத்திலிருந்து தான் லொரேத்தோ என்கிற பெயர் வரக்காரணமாக அமைந்தது. பின் தற்போதுள்ள இடத்திற்கு இந்த இல்லம் கொண்டு வரப்பட்ட பின்னும் லொரேத்தோ என்கிற பெயர் நிலைத்து நிற்கிறது.



கி.பி. 1295ஆம் ஆண்டு அங்கோனா வனப்பகுதியிலிருந்து ரெகனாதி என்ற குன்றிற்கு மாற்றப்பட்டது. ஆனால், இக்குன்றானது, கடற்கரைக்கு மிக அருகில் இருந்ததால், துருக்கியரின்





திட்டம் நிறைவேறுவதில் மரியா பெரும்பங்கு வகிக்கிறார். ஆகையால் என்றும் கன்னியாகிறார். விசுவாசக் கண்களால் பார்த்தால் மட்டுமே கடவுள் தனது மகனை ஏன் ஒரு கன்னியிடம் பிறக்கச் செய்தார் என்பதன் காரணங்கள் புரியும். வார்த்தையானவர் மரியின் வயிற்றில் மனுவானார். அவர் உண்மைக் கடவுளாதலால் அவரது பிறப்புக்கு பிறகும் மரியாவை என்றும் கன்னியாகவே நிலைத்திருக்கச் செய்தார்.

**கன்னியரில் உத்தம கன்னி**

பழைய உடன்படிக்கை முழுவதிலும் தூய மனங்கொண்ட பல பெண்கள், மரியாவுக்குக் கிடைத்த பேற்றினைப் பெற தவமிருந்தார்கள். அதனை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். தொடக்கக் காலத்தில் ஏவாள், கடவுளிடமிருந்து உலக உயிர்களுக்கெல்லாம் தாயானவள்(தொநூ3,15-20). என்னும் வாக்குறுதியைப் பெற்றாள். அவளது கீழ்படியாமையினால் கடவுளிடம் கொண்டிருந்த அவளது உறவில் ஆழமான விரிசல் ஏற்பட்டது. ஆனால் முதிர்ந்த வயதிலும் சாராள் ஒரு மகனைப் பெற்றெடுத்ததன் வழியாக சாராள் இவ்வாக்குறுதியினை நிறைவேற்றினாள் எல்லா எதிர்பார்ப்புகளின் மத்தியிலும் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட புறந்தள்ளப்பட்ட ஏழை எளிய மாந்தரோடு கடவுள் தனது வாக்குறுதியைப் புதுப்பித்தலின் வழியாக அவர்களிடம் தனது பிரமாணிக்கத்தை உறுதிப்படுத்தினார்.

சாமுவேலின் தாயாகிய அன்னா, தெபோரா, ரூத், ஜூடித், எஸ்தர் மற்றும் பல பெண்கள் இறை உறவில் தங்களைப் பிணைத்துக் கொண்ட பெரும் மங்கையராவர்(1கொரி1,1சாமு1). ஆனால் இவ்வனைத்து பெண்களிலும் பெண் குலத்தில் பிறந்த யாவரிலும் தனது ஜெபத்தால், விசுவாசத்தால் இறைவன் மீது கொண்டிருந்த நல்லுறவால் பிறர் மீது கொண்டிருந்த அன்புறவால் தனித்தன்மை கொண்டு விளங்கியர் அன்னை மரியா. நீண்ட கால காத்திருப்புக்குப் பின் அன்னை மரியின் கண்ணிய வாழ்வினால் காலம் கனிந்து கன்னியின் வயிற்றில் குழந்தை பிறந்தது.

புனித ஜெரோம் தான் எழுதிய மடலில் மரியா கன்னியான அவரால் சூசையும் கன்னித் தன்மையோடு வாழ்ந்தார். கன்னித் தன்மையோடு வாழ்ந்த இருவராலும் கன்னித் தன்மை கொண்ட மகன் பிறந்தார். இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் கருவானார். ஏனெனில் அவர் புதிய படைப்பைத் தொடங்கிய புதிய ஆதாம் (1 கொரி 15,45,47) மரியாவின் கன்னித் தன்மை அவரது விசுவாச அடையாளம் மற்றும் கடவுளின் திருவுளத்திற்கு அவர் அளித்த பரிசு இவ்வுலகில் எந்தக் கன்னிப் பெண்ணும் மரியாவின் இத்தகைய உயர்ந்த, உன்னத நிலையை எட்ட முடியாது. கடவுளின் மேலான அருளைப் பெற்ற அன்னை மரியா, என்றும் கன்னியரில் உத்தம கன்னிகையாக உலகில் உலா வருகின்றார்.

இது எப்படி நிகழும் நான் கன்னி ஆயிற்றே (லூக் 1,34) என்று மரியா வினவுகின்றார். அதற்கு வானதூதர் தூய ஆவி உம்மீது வருவார் என்று விடை தருகின்றார். இத்தகைய கூற்றுகள் அன்னை மரியாவின் கன்னித் தன்மைக்கு அடிப்படை ஆதாரங்கள். இது மனிதராகப் பிறந்த எவருக்கும் கிடைக்கப் பெறாத பாக்கியம். இவ்வுலகில் பிறந்து திருமணம் கண்டு குழந்தை பெற்றெடுத்த எந்தப் பெண்ணுக்கும் கிடைத்திராத பெரும்பேறு. எனவேதான் மரியா இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்று இறைவனை மாட்சிப்படுத்துகின்றார்(லூக் 1,48).

அன்னை மரியாவின் கன்னித் தன்மையையும், அவரது உள்ளத் தூய்மையும் ஒப்பிட முடியாத உன்னத நிலையில் இருக்கின்றன. இருப்பினும் கன்னிமரியின் மகத்துவத்தையும் அவரது கன்னித்தன்மையின் மாண்பினையும் எவரெஸ்டு சிகரங்களாக படம்பிடித்துக் காட்டுகின்றனர் திருச்சபையின் ஆதித் தந்தையர்கள். புனித எ.ஃப்ரேம் வெண்மை நிற லில்லி மலர் எனவும் புனித ஜெர்மாடின் பனியை விட வெண்ணிற லில்லி எனவும் புனித ஜான்சாஸ்டர் இயேசுவை மகனாகப் பெற்றெடுத்த லில்லி எனவும் புனித பொனவெஞ்சர் கற்பு நிறை லில்லி எனவும் கூறுகின்றனர். புனித அல்போன்ஸ் லிகோரி கன்னிமை நிறைந்த லில்லி எனவும் கூறுகின்றனர். ஆனாலும், லில்லி மலரானது இன்று மலர்ந்து நாளை மடியும் இயற்கையின் தன்மை என்பதால் என்றும் கன்னியான மரியாவுக்கு நிகர் இவ்வுலகில் வேறு எதுவுமில்லை என்பதே உண்மை.

லாத்தரன் திருச்சங்கம்(649) மனித ஈடுபாடு இல்லாமல் தூய ஆவியின் வல்லமையினால் இயேசு கருவாக உருவாகினார் என்றுரைக்கிறது. நீங்கள் உறுதியாக நம்புகிற ஆண்டவர் இயேசு உடலைப் பொறுத்தவரையில் தாவீது மரபிலிருந்து வருபவராகவும் கடவுளின் திருவுளம் மற்றும் அவரது ஆற்றலைப் பொறுத்தவரையில் கடவுளின் ஒரே மகன் என்னும் பேற்றினை உடையவராகவும் உண்மையாகவே கன்னியின் வயிற்றில் பிறந்தவராகவும் இருக்கின்றார். என்றும் புனித இக்னேசியஸ் குறிப்பிடுகின்றார். மரியா எப்போதும் கன்னி என்பதற்கு இதுபோல இன்னும் பல ஆதாரங்கள் உள்ளன. எனினும் மரியாவின் கன்னித் தன்மை மீது கொண்ட நமது விசுவாசம் உயர்ந்து நிற்கும்போது இறைவனின் விண்ணகப் பரிசு இதைவிட உயர்ந்ததாக இருக்கும்.

**என்றும் கன்னியான மரியா**

கிறிஸ்துவின் பிறப்பானது அன்னை மரியின் கன்னித் தன்மைக்கும் களங்கம் ஏற்படுத்தவில்லை. மாறாக பெருமை அளித்தது. அவரது கன்னித் தன்மையை மேலும் புனிதப்படுத்தியது. எனவேதான் திருச்சபை வழிபாட்டு முறைகள் மரியாவை என்றும் கன்னியானவர் முக்காலத்திற்கும் கன்னி என்று பெருமைப்படுத்துகின்றன. கடவுளின்








படையெடுப்புகளுக்கு அஞ்சி, மீண்டும் மோந்தே புரோதோ என்கிற இடத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது. அவ்விடமானது, இரண்டு பிரபுகளுக்கு சொந்தமாக இருந்ததால் ஏற்பட்ட போட்டியின் காரணமாக, ஐந்தாம் மற்றும் இறுதியாக கி.பி. 1296ல் அன்னையின் இல்லமானது, தற்போதுள்ள இடத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இந்த இல்லமானது, உண்மையில் நசரேத்திலிருந்துதான் கொண்டுவரப்பட்டது என்று கூறுகிறவர்கள் பின்வரும் வாதங்களை முன்வைக்கின்றனர்.

1. இந்த வீட்டை கட்டப் பயன்படுத்தப்பட்டுள்ள சுண்ணாம்புக் கலவையும், கற்களும் நாசரேத்து பகுதியில் பயன்படுத்தப்படுபவையாகும். இத்தகைய பொருட்கள் இத்தாலியில் கிடைப்பதுமில்லை, பயன்படுத்தப்படுவதுமில்லை.
2. கட்டிடத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ள கலவையானது பாலஸ்தீனத்தில் முதலாம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்டதாகும். இத்தாலியில் இக்கலவை பயன்பாட்டில் இல்லை.
3. இக்கட்டிடத்தில் உள்ள எழுத்துக்களும் உருவங்களும், நாசரேத்தில் உள்ள மங்கள வார்த்தை கெபியில் உள்ள எழுத்துக்களுக்கும், உருவங்களுக்கும் ஒத்து போகிறது.
4. இந்த இல்லமானது எந்த அஸ்திவாரமும் இல்லாமல் மண்தரையின் மீது அமைந்துள்ளது. தரையில் உள்ள காய்ந்த முட்புதர்களும், வால்நட் விதைகளும் அப்படியே உள்ளன.
5. மூன்று சுவர்களைக் கொண்ட இந்த இல்லமானது, நாசரேத்தில் உள்ள அஸ்திவாரத்தில் சரியாக பொருந்துகிறது.

எனவே, இந்த இல்லம் நசரேத்திலிருந்துதான் கொண்டுவரப்பட்டது என்று உறுதியாக கூறமுடியும் என்கிறார்கள்.

முத்திபேறுபெற்ற அன்னா கத்தரினா எம்மரிக் பின்வருமாறு கூறுகிறார். நான் பலமுறை இந்த புனித இல்லமானது வானதூதர்களால் தூக்கி கொண்டுவரப்படுவதை காட்சியில் கண்டிருக்கிறேன். என் கண்களையே நம்ப முடியாத வகையில் அக்காட்சி இருந்தது. ஏழு வானதூதர்கள் இந்த இல்லத்தை கொண்டுவரும் பணியை செய்தனர். மூன்று சுவர்கள் உள்ள இந்த இல்லத்தை ஒரு புறத்தின் மூன்று வானதூதர்கள் என இருபுறமும் ஆறு வானதூதர்கள் தூக்கி பறந்து வந்தனர். அஸ்திவாரமே இல்லாத இவ்வீட்டின் அடிப்பகுதியில் ஒளி படர்ந்திருந்தது. ஏழாம் வானதூதர் தூக்கிவரப்படும் இல்லத்தில் மீது சுற்றிக் கொண்டே செல்லும் பாதையில் ஒளி வீசிக்கொண்டே பறந்து வந்தார்.



**வானதுாதர்களால் கொண்டு வரப்படவில்லை என்பதற்கான வாதங்கள்:**

தற்போது கிடைக்கப்பட்டுள்ள ஆதாரங்களின் அடிப்படையில், இந்த இல்லமானது, ஆஞ்சலோ என்கிற பிரபுக்களின் குடும்பத்தால் கடற்மார்கமாக கொண்டுவரப்பட்டது. கி.பி. 1900ம் ஆண்டில்



திருத்தந்தைக்கு மருத்துவராக இருந்த ஜிசப்பே லப்போனியி வத்திகான் நூலகத்திலிருந்த பழமையான சுவடிகளை வாசித்த போது, இந்த இல்லமானது இஸ்லாமியரின் படையெடுப்பின் போது, ஆஞ்சலோ குடும்பத்தினரால் சிறிய பகுதிகளாக பிரிக்கப்பட்டு, பத்திரமாக கடல் வழியாக இத்தாலிக்கு கொண்டு வரப்பட்டதை அறிந்து கொண்டதாக கூறுகிறார். மற்றொரு ஏடானது, கி.பி. 1294ஆம் ஆண்டில் ஆஞ்சலோ குடும்பத்தை சார்ந்த பெண் ஒருவர், இத்தாலியில் இருந்த நேப்பில்ஸ் அரசரின் மகன் இளவரசர் பிலிப்பை மணந்து கொண்டார். அப்போது, அவருக்கு சீதனமாக அன்னையின் இந்த இல்லமானது அளிக்கப்பட்டது. எது எப்படி இருந்தாலும், இந்த இல்லம் நாசரேத்திலிருந்து கொண்டு வரப்பட்டது என்பது உறுதியாக தெரிகிறது. இந்த இல்லத்தின் சுவர்களின் உள்ள குறியீட்டு எண்கள், இந்த இல்லம் நாசரேத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மீண்டும் அதன் பழமை மாறாமல் கட்ட கொண்டு வரப்பட்டது என்பதை குறித்துக் காட்டுகிறது. இந்த குறியீட்டு எண்கள் இல்லத்தை எந்த மாற்றமும் இன்றி கட்ட உதவியாக இருந்ததாக தொல்பொருள் ஆராய்சியாளர்கள் கூறுகின்றனர். இந்த இல்லம் இத்தாலிக்கு கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் கி.பி. 1291ஆம் மே மாதம் 12ஆம் தேதி, ஆக்ரே என்ற துறைமுகத்தில் உள்ள ஆவணங்களுடன் ஒத்துபோகிறது என்பது இந்த வீடு நாசரேத்திலிருந்து வந்தது என்ற உறுதித் தன்மைக்கு சான்றாக உள்ளது.

கி.பி. 1962-1965 ஆண்டுகளில் நாசரேத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில், இந்த இல்லம் இருந்ததாக கூறப்படும் இடத்தில் பழமையான உரோமை நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவை, கி.பி. 1287ல் ஆளுநராக இருந்த குய்தோ என்பவரது நாணயங்களாக இருந்தன. இது, இந்த இல்லத்தின் உண்மைத் தன்மைக்கு வலுசேர்ப்பதாக உள்ளன.

கி.பி. 1797ஆம் ஆண்டு நெப்போலியன் படையெடுப்பின் போது இந்த ஆலயத்தில் இருந்த பழம்பெரும் பொருட்கள் கொள்ளையிடப்பட்டன. பின், திருத்தந்தைக்கும் நெப்போலியனுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின் படி இந்த ஆலயமானது விடுவிக்கப்பட்டது.

**குழந்தையை தாங்கியிருக்கும் கருமை நிற அன்னை**

இந்த ஆலயத்தில் வீற்றிருக்கும் அன்னையின் திருஉருவமானது 15ம் நூற்றாண்டை சார்ந்ததாகும். கருமை நிற ஆலிவ் மரத்திலிருந்து உருவாக்கப்பட்ட இந்த திருஉருவம், குழந்தை இயேசுவை கரங்களில் தாங்கியிருப்பதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 33 இஞ்ச் ஆகும். இத்திருஉருவமானது நகைகளாலும், மேற்போர்வையாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

கி.பி. 1797ஆம் ஆண்டு நெப்போலியன் படையெடுப்பின் போது, இத்திருஉருவமும் இந்த ஆலயத்திலிருந்து எடுக்கப்பட்டு, பாரீஸ் நகருக்கு கொண்டு செல்லப்பட்டது. பிறகு, திருதந்தையுடன் ஏற்பட்ட தொலேந்தீனோ உடன்படிக்கையின்படி உரோமை நகருக்கு கொண்டுவரப்பட்டது. அங்கிருந்து, மிகுந்த வணக்கத்துடன் எட்டு நாட்கள் ஊர்வலமாக







# மாதா மன்றாட்டு மாலை

4



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

**கன்னியர்களின் உத்தம கன்னிகையே**

**கன்னியின் வயிற்றில் கதிரவன் தோன்றவே**
**கன்னிமை அவளது வாழ்விலே தொடர்ந்ததே**
**கன்னியர்கெல்லாம் கன்னியாய் மாறினார்**
**கடவுளைத் தந்தநல் பொக்கிசமானார்.**

இவ்வுலகில் சாதனைகள் சிலவே அனைவரும் சாதிப்பதில்லை. சிலரைத் தவிர. அச்சாதனைகள் இயற்கையானதல்ல. மாறாக பல பயிற்சிகளாலும், விடா முயற்சிகளாலும் உருவானவை. அன்னை மரியாவும் சாதித்தார். ஆனால் அச்சாதனைகளுக்காக அவர் பயிற்சிகள் மேற்கொள்ளவில்லை. விடாமுயற்சியும் தன்னிலே கொள்ளவில்லை. மாறாக இறையருளால் நிரப்பப்பட்டு இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டு இறைச் சித்தத்தை நிறைவேற்றும் பொருட்டு அவரால் படைக்கப்பட்டவைதான் இச்சாதனைகள். யாராலும் எக்காலத்திலும் முறியடிக்கமுடியாத சாதனைகள். கடவுளின் தாயாகவும் ஜென்ம பாவமின்றி உலகில் உற்பவித்த சேயாகவும் வாழ்ந்தார். உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்தச் செல்லப்பட்டு முடிசூட்டப்பட்ட விண்ணக அரசியாகவும் தனது புதுமைகளாலும் அற்புதங்களாலும் மண்ணுலகின் அரசியாகவும் முடிசூட்டப்பட்டாள். எல்லாவற்றிற்கும் மேலாக என்றும் கன்னி என்ற தனித்துவமான தகுதியைப் பெற்று கன்னியர்களில் உத்தம கன்னியாய் இருக்கின்ற அன்னையின் சாதனைகள் நம் மனங்களை கொள்ளை கொள்ளும் பேருண்மைகளாகும். கருவுற்ற பின்னும், திருமகனைப் பெற்றெடுத்தப் பின்னும் என்றும் கன்னியாக இருக்கின்ற அன்னை கன்னியர்களின் உத்தம கன்னியானவர் என கருதபட தகுதியானவரே.

**கன்னி மரியா**

மிலான் நகர் ஆயர் புனித அம்புரோஸ் கிறிஸ்து இவ்வுலகிற்கு வர நுழைவு வாயிலாக இருந்தவர் மரியா. ஆண்டவரது பிறப்பு அன்னையின் கன்னி தன்மைக்கான முத்திரையை உடைக்கவில்லை என்று கூறுகிறார். லாத்தரன் திருச்சங்கம் ஆண்டவரது பிறப்பு அன்னை மரியின் கன்னித்தன்மைக்கு அவதூறு ஏற்படுத்தவில்லை. மாறாக மேலும் அழகுபடுத்தி புனிதப்படுத்துகிறது என்கிறது.



# முத்திப்பேறு எலிசபெத் பிச்செநார்தி O S M



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

முத்திப்பேறு எலிசபெத் பிச்செநார்தி கிரெமோனா (cremona) என்கிற ஊரில் கி.பி. 1428 மற்றும் 1430 க்கு இடையில், இவ்வூரின் உயர் வர்க்க குடும்பத்தை (Aristocratic) சார்ந்த லியனார்தோ மற்றும் பாவ்லா நுவோலோனி ஆகியோருக்குப் பிறந்தார். அவரது தந்தை கோன்சாகா (Gonzaga) என்கிற அரச குடும்பத்தின் சேவையில் இருந்தார், மேலும் அவர் தனது மகளான எலிசபெத்தை நகரத்தில் உள்ள உயர் வர்க்க குடும்பத்தில் உள்ளவர்களுக்கு திருமணம் செய்து கொடுக்க விரும்பி தீவிர முயற்சியில் இருந்தார். ஆனால் அதற்கு பதிலாக அவள் அன்னை மரியாளைப் போல கன்னியாக இருக்க முடிவு செய்தார். அதே ஊரில் இருந்த மரியின் ஊழியர் தந்தையர்கள் எடுத்துக்காட்டான வாழ்க்கையே இதற்க்கு இதற்கு காரணம். ஆனால் அவளுக்கு எந்த அடைப்பு கன்னியர்கள் (cloistered nuns) மடத்திற்கும் செல்ல வாய்ப்பு கிடைக்கவில்லை. அக்காலத்தில், இவ்வாறு துறவற வாழ்க்கையை வாழ ஆசைப்பட்ட பெண்களுக்கு, வீட்டில் இருந்து கொண்டே வாழ்வதற்கு, துறவற ஆடை அணிந்து துறவறத்தை வாழ ஒரு வாய்ப்பு இருந்தது. எனவே, தன்னுடைய 20 ஆம் வயதிலிருந்தே எலிசபெத் மரியின் ஊழியர்களின் உடையை அணிந்து அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை வாழத் தொடங்கினாள். இந்த அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வின் மூலம், பலருக்கு உதவி செய்ய தொடங்கினாள். தினமும் திருப்பலியில் மரியின் ஊழியர் தந்தையர்களோடு ஆலயத்தில் பங்கு பெற்றார் மேலும் அடிக்கடி நற்கருணை பெற்றார்(அக்கால பழக்கவழக்கங்களின்படி மிகவும் அரிதானது). இவ்வாறு தன்னுடைய இளம் வயதிலேயே நன்முறையில் கடவுளுக்கு உகந்தவளாக வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது தன்னுடைய தந்தையையும் தாயையும் இழந்தாள். அதன்பின் தன்னுடைய அக்காவின் வீட்டிற்கு சென்று, அவளுக்கென்று கொடுக்கப்பட்ட ஒரு சிறிய அறையில் இறுதிநாள் வரை வாழ்ந்தாள். இவளுடைய பக்தியையும் வாழ்வையும் கண்ட இந்த ஊர்மக்கள் அவளிடம் மன்றாடும் படி வேண்டினார்கள். பிப்ரவரி 19, 1468 இல் தன்னுடைய 40 வது வயதிலேயே இறைவனடி சேர்ந்தார். அவளுடைய கல்லறைக்கு சென்று பலரும் மன்றாட தொடங்கினார்கள். 1804 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் தேதி திருத்தந்தை ஏழாம் பத்திநாதர் இவருடைய வழிபாட்டு முறைக்கு ஒப்புதல் அளித்து, முத்திப்பேறு பட்டம் அளித்தார்.







கொண்டுவரப்பட்டு இறுதியில் கி.பி. 1801ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் நாள் லொரேத்தோ வந்தடைந்தது.

கி.பி. 1921ல் ஏற்பட்ட தீவிபத்தில் ஆலயத்தில் இருந்த பல பொருட்கள் எரிந்து நாசமாயின. அவ்வாறு தீயில் அழிந்த போன விலை மதிப்பில்லாத பொக்கிசங்களில் அன்னையின் திருஉருவமும் ஒன்றானது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். அதன் பின், பழமை மாறாமல், மற்றொரு திருஉருவமானது வடிக்கப்பட்டது. அத்திருஉருவமானது, கி.பி. 1922ஆம் ஆண்டு திருதந்தை ஒன்பதாம் பயஸ் அவர்களால் புனிதப்படுத்தப்பட்டு. முடிசூட்டப்பட்டது.

## திருத்தந்தையர்களும் லொரேத்தோ அன்னையும்

லொரேத்தோ அன்னை பற்றிய குறிப்புகள் திருத்தந்தையர்களின் மடல்களில் சிறுது காலம் கடந்தே காணப்படுகிறது. கி.பி. 1507ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் ஜீலியஸ், மிகுந்த கவனமுடன் லொரேத்தோ நகரில் உள்ள அன்னையின் இல்லத்தைப் பற்றியும், அங்கு கடைப்பிடிக்கப்பட்ட வணக்கத்தையும் பற்றி கூறுகிறார். அவருடைய வார்த்தைகளில், பக்தி பாரம்பரியத்தின் படியும், அங்கு நிலவும் நம்பிக்கையின் அடிப்படையிலும் அன்னையின் இல்லமானது புனிதமானதாகவும், உண்மையானதாகவும் கருதப்படுகிறது என்றார்.

கி.பி. 2012 ஆம் ஆண்டு அக்டோபர் 4ஆம் நாள் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட், லொரேத்தோ திருத்தலத்திற்கு திருப்பயணம் சென்ற போது, உலக ஆயர்கள் மாமன்றத்தையும், நம்பிக்கை ஆண்டையும் அன்னையின் பரிந்துரையில் ஒப்படைத்தார். இந்நிகழ்வு அன்னையின் நிலையான பிரசன்னத்தையும், அவர் திருஅவைக்காக தொடர்ந்து பரிந்து பேசுவதையும் காட்டுகிறது.

கி.பி. 2020 ஆண்டு ஜீன் 20ஆம் தேதி, அன்னையின் மாசற்ற இருதயத்தின் திருவிழா அன்று, அன்னையின் மன்றாட்டு மாலையில் மூன்று வேண்டுதல்களை புதிதாக சேர்த்தார். அவை: இரக்கத்தின் அன்னையே, நம்பிக்கையின் அன்னையே, புலம்பெயர்ந்தோரின் ஆறுதலே என்பனவாகும். நாம் பொதுவாக செபிக்கும் அன்னையின் மன்றாட்டு மாலையானது, லொரேத்தோ மன்றாட்டுமாலை என்றழைக்கப்படுவதை நாம் இங்கு நினைவில் கொள்ளுதல் தகும்.

இவ்வாறாக, வரலாற்றின் நீண்ட நெடிய பயணத்தில் அன்னையோடு தொடர்புடைய, அவர் வசித்ததாக நம்பப்படும் இல்லம் இன்றும் நம் மத்தியில் இருப்பதும், பக்தி விசுவாசத்தோடு இறைமக்கள் அவ்வில்லத்தை தரிசிப்பதும் நம் விசுவாச வாழ்விற்கு ஒரு உந்துசக்தியாக இருக்கிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அன்னை நம்மோடு இருக்கையில் நாம் எதற்கும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. வாழ்க மரியே! வாழ்க உம் திருநாமம்!!



திருப்பயணம் தொடரும்..........

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி எண்ணிக்கை 1-18



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | | | | | 3 |
| | 7 | | | | | | | 8 | |
| | | 11 | | | | | 12 | | |
| | | | 13 | | | | | | |
| | | | | 15 | | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | | | 14 | | | |
| | | 9 | | | | | 10 | | |
| | 5 | | | | | | | 6 | |
| 1 | | | | | | | | | 4 |

**வலமிருந்து இடம்**

3) ……….. செய்துகொண்ட பொருத்தனைக் காலம் முழுதும் சவரக்கத்தி அவன் தலையில் படக்கூடாது:

4) மகிழ்ச்சியின் நாள், குறிக்கப்பட்ட திருநாள்கள், மாதப் பிறப்புகள், ஆகியவற்றில் நீங்கள் எரிபலியையும் நல்லுறவுப் பலிகளையும்……….. போது எக்காளங்களை ஊதுவீர்கள்

6) அவர் கூறியது: என் வார்த்தைகளைக் கேளுங்கள்: உங்களுக்குள் இறைவாக்கினன் ஒருவன் இருந்தால் ஆண்டவராகிய நான் ஒரு காட்சியின் வழியாக அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன். ………..அவனோடு பேசுவேன்.

8) ஆனால் ஒருவன் வேண்டுமென்றே எதையும் ………..செய்தால் அவன் உள்நாட்டவனாயினும் உங்களிடையே இருக்கும் அயல்நாட்டவனாயினும் அவன் ஆண்டவரை ஏளனம் செய்கிறான்:

12) இரண்டு வெள்ளி எக்காளங்களைச் செய்துகொள்: அடிப்பு வேலையாக அவற்றைச் செய்ய………..

14) பின்னர் அவர்கள் ஒரு நீலத்துணியை எடுத்து அதை விளக்குத்தண்டு, அதன் விளக்குகள், அதன் திரிகள், அதன் ………. தட்டுகள் ஆகியவற்றின் மேலும் எண்ணெய்க்காகப் பயன்படுத்தும் பாத்திரங்கள்

**இடமிருந்து வலம்**

1) இஸ்ரயேலர் எகிப்து நாட்டிலிருந்து வெளியேறிய ……… ஆண்டு, இரண்டாம் மாதம், முதல் நாளன்று, சீனாய்ப் பாலைநிலத்தில் சந்திப்புக் கூடாரத்தில் ஆண்டவர் மோசேயுடன் பேசினார்.

2) திருமுன் அப்பத்து மேசையின் மேல் அவர்கள் ஒரு நீலத்துணியை விரிப்பர்: அதன் மேல் தட்டுகள், பூக்கரண்டிகள், கிண்ணங்கள் ஆகியவற்றை வைப்பர்: அப்பம் அதன் மேல் ………. இருக்கும்:





8-ம் பக்க தொடர்ச்சி........

அழைப்பு விடுக்கின்றார். அன்று தொடக்கத் திருச்சபையில் சிதறிக் கிடந்த சீடர்களையெல்லாம் ஒன்று திரட்டி, ஆவியாரை நிரம்பப் பெறச் செய்து இறையாட்சிப் பணியாற்ற மரியா திருத்தூதர்களை அனுப்பி வைத்தார். இன்றும் அதே பணியை கூட்டியக்கத் திருஅவையின் அன்னையாக இருந்து செயல்படுகிறார். ஏழு புனிதர்களைப் பின்பற்றி துறவற அர்ப்பண வாழ்வை ஏற்றுக் கொள்ள இளைஞர்களும், இளம்பெண்களும் முன் வருவோம். இயேசுவின் தோழர்களாய், தோழியராய் மாறுவோம்.

ஐந்தாவதாக, நம் தாய் மரியா இச்சபையை ஒரு குழுவாக உருவாக்க விரும்புகிறார். திருஅவை வரலாற்றில் கண்டிராத ஒரு புதுமையை நாம் அன்னையில் காண்கிறோம். இயேசுவும் குழுவாக தனது பணி வாழ்வைத் தொடங்கினார். இறையாட்சியின் பகிர்வும், பாசமும், ஒற்றுமையும் எங்கும் எப்போதும் உணரப்பட வேண்டும் என்று முழங்கினார். அனைவரும் குறிப்பாக ஏழைகள், பாவிகள், ஒதுக்கப்பட்டோர், விடுதலை எனும் சுவாசக்காற்றை தடையின்றி சுவாசிக்கச் செய்தார். அப்பணியைத் தொடர்ந்தாற்ற நமது புனிதர்கள் குழுவாக அழைக்கப்பட்டனர். மூவொரு இறைவனில் விளங்கும் பிரிக்க முடியா ஒன்றிப்பும், ஆட்சியும், மகிமையும் இப்புனிதர்களில் மிளிர்வதைக் காண்கிறோம். நமது குடும்பங்கள், துறவறக் குழுமங்கள், தலத் திருஅவை, நாம் வாழும் சமுதாயத்தில், உறவுகளின் நிலைமை என்ன? தனித்தனி தீவுகள் போன்ற வாழ்வை விடுத்து, தோழமை உறவுகளைக் கட்டியெழுப்புவதில் நமது உண்மையான மகிழ்வைக் கண்டு கொள்வோம்.

ஆறாவதாக, கன்னி மரியா இப்புனிதர்களை ஒழுங்குமுறைகளைப் பின்பற்ற அழைப்பு விடுக்கின்றார். மிகக் கடினமான ஒரு வாழ்வு வாழப் பணிக்கின்றார். 'இடுக்கமான வாயில் வழியே நுழைய முயலுங்கள்" என்ற இயேசுவின் குரலொலி நம்மில் ஒலிக்கின்றது. திருச்சட்டத்தை முழுமையாக நிறைவேற்றியவர் நம் தாய் மரியா. அவரின் வழியில் செல்லும் மரியின் ஊழியரும் இறைவிருப்பத்தை வெளிப்படுத்தும் திருவிவிலியம், திருஅவையின் சட்டங்கள், பாரம்பரியங்கள், சபையின் ஒழுங்குகளை பிரமாணிக்கமாக அனுசரித்து புனித தன்மையில் வளர, அன்னை நம்மை அழைக்கின்றார். விண்ணகத் தந்தை நிறைவுள்ளராய் இருப்பது போல, நாமும் நிறைவு உள்ளவர்களாய் இருக்க, இத்தகைய கடினமான பாதையில் பயணிக்க, மரியன்னை நம்முடன் வருகின்றார். வெண்ணாடை அணிந்து குருத்தோலைகளை ஏந்தும் பேறு அனைவருக்கும் கிடைக்க அன்னை விரும்புகின்றார். அவரது விருப்பத்தை நிறைவேற்றுவோம்.

ஏழாவதாக, இன்றும் மரியின் ஊழியர், புனித வியாகுல அன்னையின் மீதும், அவருடைய ஏழு வியாகுலங்கள் மீதும் அளவற்ற பக்தியை கொண்டிருக்கின்றனர். அவரது வியாகுல ஆன்மீகத்தை வாழ்வாக்குவதிலும், பரப்புவதிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். துன்பங்களை, சோதனைகளை, துணிவுடன் ஏற்கவும், அவற்றை மீட்பின் சாதனைகளாக மாற்றவும் துணிகின்றனர். சிலுவையடியில் நின்ற வீரப்பெண் வியாகுல அன்னையைப் போன்று துன்புறுவோர் அருகில் துணையாய் நின்று, இயேசுவின் உயிர்ப்பின் ஆற்றலை உணர்த்தி வருகின்றனர். இன்றைய சிலுவைகளில் அறையப்படும் பெண்கள், சிறுமியர், சமுதாயத்தின் ஓரத்திற்கு தள்ளப்பட்ட தாழ்த்தப்பட்டோர், ஒதுக்கப்பட்டோரின் வியர்வை நெடியை நுகர்பவர்களாய் தங்களை பல வகையான இறையாட்சிப் பணிகளில் கரைத்து வருகின்றனர். மேலும் மரியின் ஊழியர் நண்பர் குழுக்களை ஏற்படுத்தி அன்னையின் வியாகுலங்களின் பக்தியைப் பரப்பும் வகையில் வியாகுல மாதா செபமாலை துயரப்பாதை போன்ற எளிய ஆன்மீக பயிற்சிகளைப் பயிற்றுவித்து, அவர்கள் இரக்கச் செயல்களில் ஈடுபடவும் வழி வகுக்கின்றனர்.

**நிறைவுரை**

பொதுநிலையினரான இந்த எழுவரும் உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ்ந்து, துறவு அர்ப்பணத்தை மேற்கொண்டு, புனிதராக வாழ்ந்து, புனிதராக மரித்து, இன்று நம்மையும் அப்புனித பாதைக்கு அழைக்கின்றனர். மரியின் ஊழியருக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இப்புனிதர்களை அன்னை மரியா நமக்கு காட்டுகிறார். கிறிஸ்தவ வாழ்வை, அர்ப்பண வாழ்வை முழுமையாக வாழ்வோம். மரியா, அனைத்து விழுமியங்கள், புண்ணியங்களின் உறைவிடமாகத் திகழ்கின்றார். புனிதர்களின் அரசியாக மாட்சியுடன் ஒளிர்கின்றார். துன்பங்கள் வழியே இப்பேறு பெற்ற நிலையை அடைந்தார். அவர்தம் அன்பு மக்களும் அன்னையும் அரசியுமான அவரைப் போன்று இம்மையிலும் மறுமையிலும் மகிழ்வுடன் வாழ ஏழு புனிதர்கள் வழியாக அழைப்பு விடுக்கின்றனர். அந்த அழைப்பை உணர்வோம். அதை வாழ்வோம். புனித பாதையில் பயணிப்போம். ஒரு நாள் மரியின் ஊழியர் சபையின் ஏழு புனிதர்களோடு ஒன்றிணைவோம்.

வருவதற்குப் பதிலாக வாயிலிருந்தும் வருவதால் வருகின்ற பிரச்சனை இது. இத்தவக்காலத்தில் மறைக்க முடியாத இவ்வுண்மையை ஏற்றுக்கொண்டு மனமாற்றம் பெற்று நமது ஆலயங்களின் புனிதத்தையும் அதன் இறை பிரசன்னத்தையும் காப்போம். நமது ஆலயங்களை இறைவனின் அருளை நிறைவாய் பொழியும் இடங்களாகவும், மக்களையும் இறைவனையும் ஒன்றிணைக்கும் இடமாகவும் எல்லோரையும் இணைத்திடும் சமத்துவத்தின் இடமாகவும் மாற்றுவோம். இறையருளை நிறைவாய் பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

நமது உள்ளங்களும், நமது ஆலயங்களும் இறைவன் வாழும் இல்லமாக மாற வேண்டுமென்றால் இறைவனது அன்புக் கட்டளைகளை கடைபிடிக்க வேண்டும் என்று முதல் வாசகம் கூறுகிறது. பத்துக் கட்டளைகள் உடன்படிக்கை என்னும் மோதிரத்தில் பதிக்கப்பட்ட வைரக்கற்களாகும். பத்துக்கட்டளைகளை மீறுவது பாவத்தை மட்டுமல்ல, உடன்படிக்கையை மீறுவதாகும். எனவே இறைவனது அன்புக் கட்டளைகளை வாழ்வாக்கி இறையன்பிலும் பிறரன்பிலும் வளர்வோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

உலக ஞானம் கடவுள் முன் மடமை என்பதை இன்றைய இரண்டாம் வாசகம் உணர்த்துகிறது. ஆற்றல்மிக்க அற்புத சக்தி உடையவரையே மெசியாவாக யூத இனம் எதிர்பார்த்தது. இயேசுவோ அருங்குறிகளையும் அற்புதங்களையும் கண்டாலன்றி விசுவாசிக்க மாட்டீர்கள் என்று இடித்துரைத்தார். கடவுளின் ஞானம் உலகத்தின் பார்வையில் மடமையாக தடைக்கல்லாக இருந்தாலும் சரியானதையும், நன்மையானதையும், நீதியானதையும் செய்யத் தூண்டுவது, கடவுளின் கட்டளைகளைச் சரியாக புரிந்துகொண்டு அதை பின்பற்றத் தூண்டுவது இவ்விறை ஞானம். இஞ்ஞானத்தை வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இறைஞானத்தோடு செயல்பட்டு இறைவனது அன்புக் கட்டளைகளை வாழ்வாக்கிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, எங்கள் அறநெறி உம்முன்பாக செழித்தோங்கிட உமது அன்புக்கட்டளைகளை தியானித்து அக்கட்டளைகளை வாழ்வாக்கி இறையன்பிலும் பிறரன்பிலும் நாளும் வளர்ந்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, உமது ஆலயங்களை நாங்கள் எங்கள் துதியை பறைசாற்றும் இடங்களாகவும், விளம்பர கூடங்களாகவும் மாற்றாமல் ஆலயத்தின் புனிதத்துவம் நிலைத்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, எங்கள் ஆலயங்களை சமத்துவமும், சகோதரத்துவமும் நிறைந்த இடங்களாகவும், நீதியும், நேர்மையும் போதிக்கின்ற இடங்களாகவும், இறையன்பையும், பிறரன்பையும் வளர்த்திடும் இடங்களாகவும் செயல்பட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் தூய ஆவியார் குடிகொள்ளும் ஆலயம் என்பதை உணர்ந்து தூய எண்ணங்கள், தூய பார்வை, தூய வார்த்தைகள், தூய செயல்பாடுகள் கொண்ட கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து கிறிஸ்துவுக்கும் அவரது போதனைகளுக்கும் சாட்சிகளாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





5.......... மக்கள் குறிக்கப்பட்ட காலத்தில் பாஸ்காவைக் கொண்டாடட்டும்.
7) உடனே மோசேயும் .......... இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பின் முழுவதற்கும் முன்பாக முகங்குப்புற விழுந்தனர்.
9) எல்லா மனிதரும் சாவதுபோல் இம்மனிதரும் செத்தால் அல்லது எல்லா மனிதருக்கும் விதிக்கப்பட்ட தண்டனையை .......... ஆண்டவர் என்னை அனுப்பியிருக்கவில்லை என்பது பொருள்
11) பொருத்தனைக் .......... முழுதும் திராட்சைக் கொடியிலிருந்து கிடைக்கும் எதையும், விதைகள், தோல்களைக் கூட, அவன் உண்ணக்கூடாது.
13) மேலும் அவர்களிடையே இருந்த பல இன மக்கள் உணவில் பெரு விருப்புக் கொண்டனர்: இஸ்ரயேல் .......... மீண்டும் அழுது கூறியது: நமக்கு உண்ண இறைச்சி யார் தருவார்?
15) ஆண்டவர் மோசேயிடம் .......... ஒருவராகத் தலைவர்கள் தங்கள் காணிக்கைகளைப் பலிபீட அர்ப்பணத்திற்காகக் கொண்டு வரட்டும்' என்றார்.

**மேலிருந்து கீழ்**

2)பெயர்களின் எண்ணப்படி ஒரு மாதமும் அதற்கு மேலுமான தலைப்பேறான ஆண்கள் அனைவரின் தொகை இருபத்தீராயிரத்து இருநூற்று .......... மூன்று.
3) கேர்சோன் புதல்வருக்கு .......... பணிக்கேற்ப இரண்டு வண்டிகளையும் நான்கு மாடுகளையும் கொடுத்தார்.
7) அவ்வாறே அவர்கள் போய் சின் பாலைநிலத்திலிருந்து .......... நுழைவாயிலருகில் இருந்த இரகோபு வரையிலும் நாட்டை உளவு பார்த்தனர்.
11) யூதாக் குலத்திலிருந்து எப்புன்னேயின் மகன் ..........
13) ஆண்டவர் சீனாய் .......... மோசேயுடன் பேசிய காலத்தில் ஆரோன், மோசே ஆகியோரின் வழிமரபினர் இவர்களே:

**கீழிருந்து மேல்**

1) இவ்வாறாக யூதா அணிகளில் எண்ணப்பட்டோரின் மொத்தத்தொகை ஒரு ............ எண்பத்தாறாயிரத்து நானூறு: இவர்கள் முதலாவதாக அணிவகுத்துச் செல்வர்
4) லேவியர் பாவத்திலிருந்து தங்களை தூய்மைப்படுத்திக் கொண்டார்: தங்கள் துணிகளைத் துவைத்தனர். ஆரோன் அவர்களை ஆரத்திப்பலியாக ஆண்டவர் திருமுன் அர்ப்பணித்தார்: அவர்களைத் தூய்மைப்படுத்தும்படி ஆரோன் அவர்களுக்காகக் கறை நீக்கப் பலியாகச் ............
5) மன்னா கொத்துமலிலி விதைபோன்றும் அதன் தோற்றம் முத்துப்போன்றும் ............
6) முதல் மாவிலிருந்து பிசைந்து செய்த ஓர் அடையை நீங்கள் உயர்த்திப் படைக்கும் படையலாக அர்ப்பணிக்க வேண்டும்: போரடிக்கும் ............ வரும் படையல் போன்றே அதை நீங்கள் அர்ப்பணிக்க வேண்டும்.
9) சந்திப்புக் கூடாரத்தில் கேர்சோன் புதல்வரின் பொறுப்பில் உள்ளவை: திருஉறைவிடம், கூடாரத்துடன் அதன் .......... சந்திப்புக் கூடாரத்தின் வாயில் திரை,
10) ஆரோன் பெயரை லேவியின் கோலின் மேல் எழுது: இவ்வாறு ஒவ்வொரு மூதாதையர் குலத் தலைவனுக்கும் ஒரு கோல் ............
14) குரு அப்பெண்ணைச் ............ஆணை இடச் சொல்லி அவளிடம், ஆண்டவர் உன் தொடைகள் அழுகி விழவும் உன் வயிறு வீங்கவும் செய்து உன் மக்களிடையே உன்னை ஒரு சாபமாகவும், ஆணைக்கூற்றாகவும் ஆக்குவார்:

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-02-2024

# கறைபடா ஓவியம் (10)



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

அன்று....
விண்ணையும் மண்ணையும் படைத்த ஆண்டவர்
தனது சாயலாய் மானிடனைப் படைத்தார்
பெண்ணவள் துணையினைப் பொலிவுடனே கொடுத்தார்
மண்ணிலே யாவிலும் மாண்புறவே வடித்தார்
விண்ணகம் போன்றொரு கானகம் கொடுத்தார்
மண்ணகம் யாவையும் ஆண்டிட அமைத்தார்
தமது சொற்படி வாழ்ந்திடப் பணித்தார்
பண்பது ஓங்கிட வார்ப்பினை அளித்தார்.

ஆனால்... மனிதன்.....
அலகையின் பேச்சுக்கு பெண்ணவள் பணிந்தாள்
அவனது சூழ்ச்சிக்கு கணவனையும் பிணைந்தாள்
ஆண்டவர் அளித்திட்ட அருளினை இழந்தான்
அதுமுதல் பாதாள இருளினில் விழுந்தான்.
பேரின்ப கானகத்து பரிசினை இழந்தான்
பெருந்துன்ப கேட்டினுக்கு உரிமையென நுழைந்தான்
பெண்ணாலே தான்கெட்டு பொல்லாது அடைந்தான்
தன்னாலே சீர்படுத்த தள்ளாது திரிந்தான்.

ஆயினும்.... கடவுள்....
அருளிழந்த மானிடனை தாமிழக்க விரும்பார்
இருளாழ்ந்த பள்ளத்திலே அவன்மிதக்க துணியார்
பெண்ணாலே விளைந்திட்ட பாவத்தின் விளைவினை
பெண்ணாலே போக்கிவிட தாமாக மொழிந்தார்
தலைமுறைகள் பலகடந்து ஓவியமாய் வரைந்தார்
தினையளவு கறையேதும் படியாமல் தெரிந்தார்
தலைப்பேறு மகனையுமே காவியமாய் விழைந்தார்
விலைப்பேறு எண்ணாது பூமியிலே நுழைந்தார்.





அன்பிலிருந்து நம்மை யாரும் எதுவும் பிரிக்க முடியாது என்கிறார் புனித பவுல் அடிகளார். இறைவனது அன்பில் நிலைத்திருந்தால் எந்த தீய சக்தியோ, பயமோ, துன்பமோ, தொல்லையோ நம்மை அணுகாது என்ற வாக்குறுதியை புனித பவுல் இன்றைய இரண்டாம் வாசகத்தின் வழியாக நமக்கு தருகின்றார்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இத்தவக்காலத்தில் இயேசுவின் சீடர்கள் தாபோர் மலையில் பெற்ற அதே இறை அனுபவத்தைப் பெற்று விசுவாசத்தில் உறுதிபெற்று வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் இத்தவக்காலத்தில் செபம், தவம், தர்மம் ஆகியவற்றில் ஈடுபட்டு பழைய பாவ வாழ்வை விட்டு புதிய மனிதர்களாக வாழ உருமாற்றம் பெற்று வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, ஆபிரகாமிடம் இருந்த அதே ஆழ்ந்த விசுவாசம் எங்களில் விளங்கவும் அதன் வழியாக உமது அருளை நாங்கள் நிறைவாகப் பெற அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் துன்பங்களையும், இழப்புக்களையும், தோல்விகளையும் சந்திக்கின்றபோது நாங்கள் மனம் தளர்ந்து விடாமல் அவற்றை தாங்குவதற்கான வல்லமையையும் பலத்தையும் எங்களுக்கு அளித்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் இறைவா, தனிமையிலும், முதுமையிலும், நோயிலும் துன்புறுகின்ற ஒவ்வொருவருக்கும் நீரே துணையாகவும் ஆறுதலாகவும் வலிமையாகவும் இருந்து அவர்களை வழிநடத்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தவக்காலம் 3-ம் ஞாயிறு (03.03.2024)**

வி.ப 20:1-17 1கொரி 1:22-25 யோவா 2:13-25

**முன்னுரை**

ஆலயம் ஆண்டவரின் உறைவிடம். மனிதனும் இறைவனும் சந்திக்குமிடம். இதய சுமைகளுக்கு சுகம் தரும் இடம். மக்களின் கண்ணீரால் கழுவப்படும் இடம். நன்றிப் பூக்களோடு வருகிறவர்களையும் உள்ளம் உடைந்தவர்களையும் வாஞ்சையோடு அரவணைக்கும் இடம். இப்படிப்பட்ட இறைவனின் இல்லத்தை வாணிபக் கூடமாக்கிவிட்டதை கண்ட இயேசு வார்த்தைகளால் சாடுவதையும், சாட்டையால் விரட்டுவதையும் இன்றைய நற்செய்தியில் பார்க்கலாம்.

இறைசாயலில் படைக்கப்பட்ட மனிதனின் சொல்லும், செயலும் இறைவனையே நாடி இருக்க வேண்டும். ஆனால் பல சமயங்களில் கள்வர் குகையாக மாற்றி விடுகிறோம். ஏழைகளை புறக்கணிப்பது, அநீதிக்கு ஆதரவு தருவது, பிறரின் நற்பெயரைக் கெடுப்பது இவைகள் எல்லாம் ஆலயத்தின் அனுதின நிகழ்வுகளாக பலநேரங்களில் மாறிவிடுகிறது. வெளி அடையாளங்களிலும், வீண் ஆடம்பரங்களிலும் நமது உண்மையான ஆன்மீகத்தை தொலைத்து விட்டோம். செபம் உள்ளத்திலிருந்து வருவதற்குப் பதிலாக உதட்டிலிருந்தும் வாழ்விலிருந்து

4 அன்பின் இறைவா, இத்தவக்காலத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் செபம், தவம் மற்றும் அறச்செயல்கள் இவற்றில் முழுமையாக ஈடுபட்டு உமது இரக்கத்தையும், உமது மீட்பையும் முழுமையாக பெற அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் இறைவா, எங்களது அனுதின சோதனை வேளையில் உமது ஞானத்தையும், உமது துணையையும் மட்டுமே தேடி உம்மில் வாழ்வின் முழுமையை அடைய அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தவக்காலம் இரண்டாம் ஞாயிறு (25.02.2024)**

தொநூ 22:1-2,9-18 உரோ 8:31-34 மாற் 9:2-10

**முன்னுரை**

விசுவாசம் என்பது கண்ணை மூடிக்கொண்டு இருளுக்குள் குதிப்பதல்ல மாறாக இருளிலிருந்து ஒளியை நோக்கி செல்வதாகும் என்கிறார் டேவிட் ரீட் என்ற அறிஞர். வாழ்வின் மகிழ்ச்சிக்கும், நிறைவுக்கும் விசுவாசம் முக்கியமானது. இறைவனை விட மேலானதும் உயர்வானதும் எதுவும் தன்னுடைய வாழ்வில் இல்லை என்று செயல்படுவதே உண்மையான விசுவாசம். இத்தகைய ஆழமான விசுவாசம் உள்ளவர்கள் மட்டுமே துன்பத்தை தாங்குவதற்கான வல்லமையை இறைவனிடமிருந்து பெறுகிறார்கள் என்ற செய்தியை இன்றைய வாசகங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன. இத்தகைய இறைவல்லமை, சிறப்பான விதத்தில் இறைவார்த்தை வழியாக வருகிறது என்பதை உணர்த்தவே திருச்சட்ட நூல்களின் பிரதிநிதியாக மோசேயும், இறைவாக்கு நூல்களின் பிரதிநிதியாக எலியாவும் இயேசுவின் உருமாற்ற நிகழ்வில் ஒரேபு மலையில் தோன்றுகின்றனர்.

நம்முடைய வாழ்வில் வரும் துன்ப துயரங்கள் இறைவனது திருக்கரத்தின் வல்லமையையும் அவரது பிரசன்னத்தையும் மகிமையையும் நமக்குக் காட்டும் தன்மை உடையன என்பதை உணர்ந்து துன்ப துயரங்களை விரும்பி ஏற்போம். சிலுவை இயேசுவாக நமக்குத் தோன்றியவர் உயிர்த்த இயேசுவாக உருமாற்றமடைந்து நம்மை மகிழ்விப்பார் என்ற ஆழ்ந்த விசுவாசத்தோடு அக்கல்வாரி பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

ஆபிரகாம் தன் உயிரைவிட மேலாக கருதி அன்பு செய்தது தன் மகன் ஈசாக்கை, ஆனால் அந்த மகனையும் கடவுளின் சொற்படி எரிபலியாக்க முனைந்தது கடவுள் மீது அவர் கொண்ட ஆழ்ந்த விசுவாசத்தை காண்பிக்கிறது. எனவே அவர் விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படுகின்றார். ஆபிரகாம் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கை பலியிடத் துணிந்தது விசுவாசத்தினால்தான் என்ற எபிரேய திருமுக ஆசிரியரின் வார்த்தைகள் இவ்வுண்மையை பிரதிபலிக்கின்றன. நாம் துன்புறும் போதெல்லாம் இறைவனுக்காகவே என்பதை உணர்ந்து அவர் திருவுளத்திற்குப் பணிந்து நடப்போம். அவர் ஆசீர் நமக்கு அபரிவிதமாக கிடைக்கும்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

நாம் கடவுளை அன்பு செய்ததில் அன்று அவரே நம்மை அன்பு செய்து நம் பாவங்களுக்குப் பரிகாரமாகத் தம் மகனை அனுப்பியதில்தான் கடவுளின் அன்பின் தன்மை விளங்குகிறது என்கிறார் புனித யோவான் தனது முதல் திருமுகத்தில். அத்தகைய கடவுளின்





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்



அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.

**பொதுக்காலம் 6-ம் ஞாயிறு (11.02.2024)**

லேவி 13:1-2,44-46 1கொரி 10:31-11:1 மாற் 1:40-45

**முன்னுரை**

நோயினாலும் வயதுமூப்பினாலும் துன்பப்படுவோர் நமது சமுதாயத்தில் அதிகம். இப்படிப்பட்டவர்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் உண்டு. புற்றுநோய், இதயத்தில் பிரச்சனை, மூளை பாதிக்கப்பட்ட நிலை போன்ற நீடித்த வியாதிகள் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஏராளமானவர்களைப் பாதிக்கின்றன. இப்படிப்பட்ட நோய்களினால் துன்பப்படுபவர்களைப் பராமரிப்பது என்பது எளிதான காரியம் அல்ல. நமது சமுதாயத்திலும், குடும்பங்களிலும் நோயினால் துன்பப்படுபவர்கள் மட்டில் நாம் ஒவ்வொருவரும் பரிவோடும், கரிசனையோடும் நடந்து கொள்ள இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

யூதக் கண்ணோட்டத்தின்படி நோய்களும், துன்பங்களும் ஒருவர் செய்த பாவத்தின் விளைவாக வரக் கூடியவை. ஆனால் இயேசுவின் பார்வையானது முற்றிலும் வித்தியாசமானதாக இருந்ததை இன்றைய நற்செய்தி சுட்டிக்காட்டுகிறது. பாவிகள் என்று சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்கள் மீது இயேசு பரிவு கொண்டு அவர்களுக்கு சுகம் கொடுத்தார். அன்று தொழுநோயாளியைத் தொட்டு குணப்படுத்திய இயேசு இன்றும் உடலளவிலான, மனதளவிலான ஆன்மாவைச் சார்ந்த அனைத்து நோய்களினின்றும் நமக்கு சுகம் தருகின்றார். இன்றைய திருப்பலியில் நாம் பெற்றுக்கொள்ளவிருக்கும் நற்கருணை வழியாக உடல், உள்ள, ஆன்ம நலம் பெற்று இறைவனது அன்பில் வாழ வளர அருள் வேண்டுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

யூதர்களைப் பொறுத்த அளவில் தொழுநோய் என்பது மிகக்கொடிய நோய். மிகக் கொடுமையான பாவம் செய்தவர்களே இந்நோயைப் பெறுவதாக யூதர்கள் நம்பினார்கள். இதன் காரணமாக தொழுநோய் கண்டவர் மனிதரது பார்வையில் மிகவும் அருவருக்கத்தக்கவராகவும், கடவுளது பார்வையில் மிகப்பெரிய பாவியாகவும் கருதப்பட்டார். கடவுளே அவரை மன்னித்து ஏற்றுக்கொண்டாலொளிய அவரது தொழுநோய் அவரை விட்டு நீங்காது என்று எண்ணியிருந்தனர். இப்படிப்பட்ட கொடுமையான தொழுநோய்க்கு உட்பட்டவர் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றியும் அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களைப் பற்றியும் இன்றைய முதல் வாசகம் விவரிக்கின்றது.

**இரண்டாம் வாசக முன்னுரை**

கிறிஸ்தவ வாழ்வின் உரிமை அன்பின் விதி முரண்பட்டுத் தோன்றியதால் எதைச் செய்தாலும் கடவுளின் மாட்சிமைக்காகச் செய்ய அழைப்பு விடுக்கின்றார் கொரிந்து நகர மக்களுக்கு புனித பவுல் அடிகளார். கொரிந்தில் உள்ள பிளவுகள் கிறிஸ்துவையே பிளவுபட்டவராகவும் அம்மக்களின் ஆன்மீக முதிர்ச்சியின்மையையும் காட்டுகின்றது என்று கூறுகிறார். யாருக்கும் இடையூறாக இல்லாமல் கிறிஸ்துவிடம் கொள்ளும் உறவைப் பற்றியே பெருமைப் பாராட்டி ஆவிக்குரியவராய் வாழவும் கிறிஸ்துவின் திருவிருந்தில் முறையாய் பங்கெடுத்து கிறிஸ்துவைப் போல் நடக்கும்படியாக புனித பவுல் விடுக்கும் அழைப்புக்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் நோயினாலும், வயதுமூப்பினாலும் துன்பப்படுவோர் மீது பரிவோடும் கரிசனையோடும் செயல்பட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, உடல், உள்ள, ஆன்ம நோய்களால் துன்புறும் அனைவர் மீதும் பரிவுகொண்டு அவர்களுக்கு பூரண சுகம் கொடுத்து மகிழ்ச்சியோடும், நம்பிக்கையோடும், சமாதானத்தோடும் வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, நோயின் நிமித்தமாக அமைதி, மகிழ்ச்சி, நம்பிக்கை இழந்திருக்கின்ற குடும்பங்கள் மீது பரிவு கொண்டு அக்குடும்பங்களுக்கு தேவையான ஆறுதலையும், மனத்திடத்தையும் அளித்து மேலும் பொருளாதார ரீதியாக அவர்கள் சந்திக்கின்ற அனைத்து பிரச்சனைகளிலிருந்து விடுவித்து காத்தருள அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது முதுமை, தனிமை நோய்களால் துன்புறும் போது நம்பிக்கை இழக்காமல் மன உறுதியோடு வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் இறைவா, நோய்களுக்கு சிகிச்சை அளிக்கின்ற மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ பணியாளர்கள் தங்களது பணியில் பொறுமையோடும், சகிப்புத் தன்மையோடும், பரிவோடும் வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தவக்காலம் முதல் ஞாயிறு (18.02.2024)**

தொநூ 9:8-15 1பேது 3: 18-22 மாற் 1:12-15

**முன்னுரை**

தவக்காலம் கரடுமுரடான உள்ளத்தை, பள்ளத்தாக்குகளை உருவாக்கிய உறவுகளை தரிசு நிலமான இதயத்தை விளைநிலமாக மாற்றும் மகத்தானக்காலம். இக்காலங்களில் வருத்த வேண்டியது உடலை மட்டுமல்ல, உள்ளத்தை. உணவை மட்டுமல்ல உள்ளத்தின் சுயநல ஆசைகளை. இதுவே உண்மையான மாற்றமாகும். வாழ்வில் வருகின்ற சோதனைகளைக் கடந்து, மனம் மாறி இறைவார்த்தைகளை இதயங்களில் ஏந்திக் கொள்ள இன்றைய இறைவார்த்தை வழிபாடு அழைப்பு விடுக்கின்றது.





தவக்காலத்தின் முதல் வாரத்தில் இருக்கும் நாம் இறையருளையும் அன்பையும் பெற்று இறைவனோடு ஒன்றித்து வாழ்ந்து உலகில் வரும் சோதனைகள் மேல் வெற்றிக் கொண்டு வாழ்ந்திட இன்றைய வாசகங்கள் அனைத்தும் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. இயேசு கிறிஸ்து தந்தையாம் கடவுளோடு ஆவியிலும் உள்ளத்திலும் ஒன்றாக இணைந்து இருந்தார். எனவே இயேசு சோதனைகளையும், சாத்தானையும் வென்று இறைவனது திருவுளத்தை நிறைவேற்றினார். நாமும் நமது வாழ்விலே தந்தையோடு இணைந்து ஆவியின் வழிநடத்துதலால் வாழ்வில் வருகின்ற சோதனைகள் மீது வெற்றி கொண்டு மனம்மாற்றம் பெற்று இறைவனது இரக்கத்தையும் மன்னிப்பையும் மற்றும் அவர் தருகின்ற மீட்பையும் பெற்று வாழ இறைவனது துணைவேண்டுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

பாவம் செய்த மக்கள் அனைவரையும் வெள்ளத்தால் அழித்த இறைவன் தம் அடியான் நோவாவை மட்டும் பாதுகாத்து அவனுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்கிறார். அவ்வுடன்படிக்கை இறைவனது அன்பின் வெளிப்பாடாக அமைகின்றது. அன்று கடவுள் ஏற்படுத்திய உடன்படிக்கையும் வாக்குறுதியும் இன்றுவரையும் எல்லா உயிரினங்களிடையேயும் நீடிக்கிறது. வானில் வானவில் தோன்றும் போது நோவாவோடு கடவுள் செய்துகொண்ட உடன்படிக்கையை நினைவு கூர்ந்து புதிய உடன்படிக்கையின் மக்களாக வாழ அருள் வேண்டுவோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

செம்மறி ஆடுகள் ஓநாய்களிடம் சிக்கித் தவிப்பது போல புதிய கிறிஸ்தவர்கள், யூதர்களாலும் புற இனத்தவர்களாலும் பல வகையில் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்பது துவக்கத் திருஅவையின் வரலாறு. இவ்வாறு துன்புறும் கிறிஸ்தவர்களுக்கு தேவையான மனதிடமும், உறுதியான விசுவாசமும் தூய பேதுரு வழங்கினார். ஆகவே நாமும் நமக்கு வருகின்ற துன்பம், கொடுமைகளை நம்பிக்கையோடும், மகிழ்ச்சியோடும் ஏற்றால் இறைவன் ஆசீர் வழங்குவார் என்ற மன உறுதியுடன் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் இத்தவக்காலத்தில் இறைவனது இரக்கத்தையும், மன்னிப்பையும் நிறைவாகப் பெற்று புதிய உடன்படிக்கையின் மக்களாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, தவக்காலம் மனமாற்றத்தின் காலம் என்பதை உணர்ந்து தங்களது பாவங்களுக்காக மனம் வருந்தி மனம்மாற்றம் பெற்று உம்மோடும், எங்கள் அயலாரோடும் ஒப்புரவாகி வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் சோதனைகளை சந்திக்கின்ற போது, எங்களது விசுவாசத்தில் தளர்ச்சி அடையாமல் மனதிடத்தோடும், மன உறுதியோடும் இருந்து சோதனைகள் மேல் வெற்றி கொள்ள அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.